Find us on facebook/tamilmirror   Follow us on tamilmirror   epaper/tamilmirror.lk

# தமிழ் Mirror

www.tamilmirror.lk

MONDAY, OCTOBER 14 2024

திங்கட்கிழமை ஒக்டோபர் 14, 2024 | ஒளி: 10 கதிர் 070 | பக்கம்:08 | நகரப்பதிப்பு | FREE

## இயற்கை அனர்த்தங்களால்
# 118,210 பேர் பாதிப்பு



### இருவர் பலி: இருவர் மாயம்: 235 வீடுகளுக்கு சேதம்

நாட்டில் ஏழு மாகாணங்களில் 15 மாவட்டங்களில் நிலவும், இயற்கை அனர்த்தங்களால், ஞாயிற்றுக்கிழமை (13)பிற்பகல் வரையிலும், இருவர் மரணமடைந்து, இருவர் காணாமல் போயுள்ளனர். 30,017 குடும்பங்களைச் சேர்ந்த 118,210 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர் என அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் அறிவித்துள்ளது.

ஒக்டோபர் 7ஆம் திகதி திங்கட்கிழமை முதல், ஞாயிற்றுக்கிழமை (13) வரையிலான காலப்பகுதியில், கடும் மழை, வெள்ளம், கடுங்காற்று, நீரில் மூழ்குதல் மற்றும் மின்னல் ஆகிய இயற்கை அனர்த்தங்களால், மேலேயே குறிப்பிடப்பட்ட எண்ணிக்கையிலானோர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

மேல் மாகாணத்தில் கம்பஹா, கொழும்பு, களுத்து ஆகிய மாவட்டங்களிலும், வட மாகாணத்தில் மன்னார், கிளிநொச்சி மாவட்டங்களிலும், சப்ரகமுவ மாகாணத்தில் கேகாலை, இரத்தினபுரி ஆகிய மாவட்டங்களிலும், தென்மாகாணத்தில் ஹம்பாந்தோட்டை, காலி ஆகிய இரு மாவட்டங்களிலும், வட மத்திய மாகாணத்தில் பொலன்னறுவை மாவட்டத்திலும் மத்திய மாகாணத்தில் கண்டி மாவட்டத்திலும், வடமேல் மாகாணத்தில் குருணாகல் மற்றும் புத்தளம் ஆகிய மாவட்டங்களிலும் இயற்கை சீற்றம் ஆட்கொண்டுள்ளது.

களுத்துறை மாவட்டத்தில் மில்லனிய பிரதேசத்தில் கடுங்காற்றினால் மரம் முறிந்துவிழுந்ததில் ஒருவர் மரணமடைந்துள்ளார். கடுவலையில், நீரில் மூழ்கியதில் மற்றுமொருவர் மரணமடைந்துள்ளார். யட்டியந்தோட்டையில் நீரில் மூழ்கி இருவர் காணாமல் போயுள்ளனர் என்று அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் அனுப்பிவைத்துள்ள ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தொடர்ச்சி P2



## விமான படையினர் உஷார்

தற்போதைய பாதகமான காலநிலை காரணமாக, அவசரநிலைகளை எதிர்பார்த்து விமானங்களையும் துருப்புகளையும் தயார் நிலையில் வைக்குமாறு இலங்கை விமானப்படைக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

நிவாரணம் மற்றும் மீட்பு நடவடிக்கைகளுக்குத் தயார் நிலையில் இருக்குமாறு விமானப்படைத் தளபதி எயார் மார்ஷல் உதேனி ராஜபக்ஷ, அறிவுறுத்தியுள்ளதாக விமானப்படையின் பேச்சாளர் எரந்த கீகனகே தெரிவித்துள்ளார்.

தொடர்ச்சி P2

## கல்வியமைச்சின் அதிரடி அறிவிப்பு

நாட்டில் நிலவுகின்ற சீரற்ற வானிலையால், இயற்கை அனர்த்தங்கள் ஏற்படுமாயின், அதிரடியான நடவடிக்கைகளை எடுப்பதற்கான அதிகாரத்தை கல்வியமைச்சு வழங்கியுள்ளது.

அதனடிப்படையில், வெள்ளம் மற்றும் ஏனைய இயற்கை அனர்த்தங்கள் ஏற்படுமாயின் பாடசாலைகளுக்கு விடுமுறை வழங்கும் அதிகாரம், மாகாண பிரதான செயலாளர்கள், மாகாண கல்விச் செயலாளர்கள், மாகாண கல்விப்பணிப்பாளர்கள், ஆகியோருக்கு வழங்கப்பட்டுள்ளதாக கல்வியமைச்சு அறிவித்துள்ளது.

நாட்டில் தற்போது நிலவும் சீரற்ற வானிலை தொடர்பில் மாவட்ட அனர்த்த முகாமைத்துவ குழுவுடன் கலந்துரையாடியதன் பின்னரே மேற்படி தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது என்றும் கல்வியமைச்சு அறிவித்துள்ளது.



## பாராளுமன்றில் முன்னாயத்தம்

நிலவும் சீரற்ற காலநிலையுடன் பாராளுமன்ற வளாகத்துக்குள் நீர் பாய்வதைத் தடுப்பதற்காக நுழைவு வாயில்களை மூடி மணல் மூட்டைகள் சனிக்கிழமை (12) வைக்கப்பட்டிருந்தன.

பாராளுமன்ற நிர்வாகம், பாராளுமன்ற காவல்துறை, இராணுவம் மற்றும் தாழ் நில மற்றும் சீரமைப்பு மேம்பாட்டு வாரியம் ஆகியவை இந்த நடவடிக்கையை எடுத்து பாராளுமன்ற உறுப்பினர்கள் நுழைவு, ஊழியர் நுழைவு, பொது நுழைவு மற்றும் பார்வையாளர் நுழைவு வாயில்களை மூடும் வகையில் மணல் மூட்டைகள் அடுக்கப்பட்டுள்ளன.

## கடமைக்குத் தவறினால் ஒரு இலட்ச ரூபாய் தண்டம்

தேர்தல் கடமைகளுக்கு சமூகமளிக்குமாறு நியமனக் கடிதங்கள் அனுப்பி வைக்கப்பட்டுள்ள சகல அதிகாரிகளும் கடமைகளுக்குக் கண்டிப்பாக வருகை தருவது அவசியம் என்று தேர்தல்கள் ஆணையாளர் நாயகம் சமன் ஸ்ரீ ரத்நாயக்க தெரிவித்துள்ளார். பாராளுமன்றத் தேர்தலில் தேர்தல் கடமைகளுக்கான நியமனக் கடிதத்தைப் பெற்றுக்கொண்டுள்ள அதிகாரிகள், கடமைக்கு வருகை தரத் தவறும் பட்சத்தில், ஒரு இலட்சம் ரூபாய் தண்டப் பணம் அறவிடப்படும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

தொடர்ச்சி P2





## கும்ப நீரில் குளித்தார் வடிவேல்

பிரபல நடிகரும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினருமான ரஞ்சன் ராமநாயக்க தலைமையில் ஆரம்பிக்கப்பட்ட ஐக்கிய ஜனநாயக குரல் கட்சியில் இந்த வருட பொதுத் தேர்தலில் போட்டியிடுவதற்காகப் பாராளுமன்ற உறுப்பினர் வடிவேல் சுரேஷ் இணைந்து கொண்டார்.

கட்சியின் பதுளை மாவட்ட அமைப்பாளராகத் தனது அரசியல் நடவடிக்கைகளில் இணைந்து கொண்ட அவர், பொதுத் தேர்தலில் பதுளை மாவட்டத்தில் மைக் சின்னத்தில் போட்டியிடும் அணியின் தலைவராகவும் செயற்பட்டு வருகின்றார்.

தொடர்ச்சி P2





## பாடசாலைகளுக்கு இன்று விடுமுறை

நாட்டில் ஏற்பட்டுள்ள சீரற்ற காலநிலை காரணமாக திங்கட்கிழமை (14) நான்கு பிரதேசங்களில் உள்ள பாடசாலைகளுக்கு விடுமுறை அளிக்கப்பட்டுள்ளது.

அந்தவகையில், கொலன்னவை, கடுவெல, களனி மற்றும் வத்தளை ஆகிய பிரதேசங்களில் உள்ள பாடசாலைகளுக்கே இவ்வாறு விடுமுறை வழங்கப்பட்டுள்ளது. மேலே குறிப்பிட்ட பிரதேசங்களில் வெள்ள அனர்த்தம் ஏற்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## 41 பேர் நீர் கட்டணம் செலுத்தவில்லை

முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் அமைச்சர்கள் 41 பேர் தமது உத்தியோகபூர்வ இல்லங்களுக்கான நீர்க்கட்டணங்களை இன்னும் செலுத்தவில்லை என தேசிய நீர்வழங்கல் வடிகாலமைப்பு சபை தெரிவித்துள்ளது.

தொடர்ச்சி P2

### பிரசார வரவு–செலவு அறிக்கையை
## 18 பேர் இதுவரை கையளிக்கவில்லை

ஜனாதிபதித் தேர்தல் வேட்பாளர்களின் பிரசார வரவு - செலவு அறிக்கையைச் சமர்ப்பிக்கும் இறுதி நாள் ஞாயிற்றுக்கிழமையுடன் (13) நிறைவடைந்து விட்டது.

மாத்திரமே இதுவரை வரவு - செலவு அறிக்கையை 20 வேட்பாளர்கள் மட்டுமே கையளித்துள்ளதாகத் தேர்தல் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

தேர்தல் சட்டத்திற்கு அமைவாக ஜனாதிபதித் தேர்தல் முடிவுகள் வெளியாகி 21 நாட்களுக்குள் பிரசார வரவு - செலவு அறிக்கையைக் கையளிக்க வேண்டும். பீல்ட் மார்ஷல் சரத்பொன்சேகா, கலாநிதி விஜயதாச ராஜபக்ஷ, ஜனக்க ரத்நாயக்க உள்ளிட்ட 20 பேர் இதுவரை அறிக்கையைக் கையளித்துள்ளதாகத் தேர்தல் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

தொடர்ச்சி P2

## விலகினார் ஹிருணிக்கா



முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ஹிருணிக்கா பிரேமச்சந்திர, ஐக்கிய மகளிர் சக்தியின் தேசிய அமைப்பாளர் பதவியிலிருந்து விலகுவதாக ஞாயிற்றுக்கிழமை (13) அறிவித்தார்.

## இவரை கண்டீர்களா?



கொழும்பு கோட்டையில் இடம்பெற்ற கொலைச் சம்பவம் தொடர்பில் சந்தேகநபர் ஒருவரைக் கண்டுபிடிக்கும் முயற்சியில் ஈடுபட்டுள்ள பொலிஸார் அவரது புகைப்படத்தை, ஞாயிற்றுக்கிழமை (13) வெளியிட்டுள்ளனர்.

கோட்டை ரெக்லமேஷன் வீதியில் சந்தேக நபர், ஒருவரைக் கூரிய ஆயுதத்தால் ஒக்டோபர் மாதம் 5ஆம் திகதி தாக்கி கொலை செய்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

சந்தேக நபர் தொடர்பில் தகவல் தெரிந்தால் பின்வரும் தொலைபேசி இலக்கங்களுக்குத் தொடர்பு கொள்ளுமாறு பொலிஸார் பொதுமக்களிடம் கோரிக்கை விடுத்துள்ளனர். கோட்டை பொலிஸ் பொறுப்பதிகாரி - 071-8591555 குற்றப் புலனாய்வுப் பிரிவு, கோட்டை - 071-8594405 ஆகிய இலக்கங்களுடன் தொடர்பு கொள்ளலாம் என்றும் அறிவித்துள்ளது.

## சதாவின் சகோதரர் வீட்டிலிருந்து வாகனம் மீட்பு



இலங்கை தொழிலாளர் ஐக்கிய முன்னணியின் பொதுச்செயலாளரும் முன்னாள் நுவரெலியா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான சுப்பையா சதாசிவத்தின் சகோதரர் வீட்டில் சனிக்கிழமை (12) மாலை மீட்கப்பட்டுள்ளது.

அரசாங்கத்தினால் பல்வேறு தேவைகளுக்காக வழங்கப்படும் வாகனங்கள் ஏதேனும் ஒரு இடத்தில் மோசடியாகவோ அல்லது சட்டவிரோதமாகவோ மறைத்து வைக்கப்பட்டுப் பாழடைந்த நிலையில் விடப்பட்டால் அது தொடர்பில் தெரிவிக்கப் பொதுமக்களிடம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

தொடர்ச்சி P2

## “புற்றுநோய் பாதிப்புகள் 77% அதிகரிக்கும்”



கடந்த ஆண்டு 33,000க்கும் அதிகமான புற்றுநோய் நோயறிதல்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. 19,000 இறப்புகள் பதிவாகியுள்ள என சுகாதார அதிகாரிகள் தெரிவித்துள்ளன. இந்நிலையில், புற்றுநோய் நோயாளிகளின் குறிப்பிடத்தக்க அதிகரிப்பு குறித்து கவலைகளை எழுப்பியுள்ளனர்.

கொழும்பில் அண்மையில் நடைபெற்ற இலங்கை புற்றுநோயியல் நிபுணர்கள் கல்லூரியின் (SLCO) 21ஆவது வருடாந்த கல்வி அமர்வுகளில் உரையாற்றிய சுகாதார செயலாளர் டொக்டர் பாலித மஹிபால, ஆண்களுக்கு மத்தியில் வாய் புற்றுநோயானது மிகவும் பொதுவானதாக உள்ளது. அதேவேளை மார்பக புற்றுநோயானது பெண்களுக்கான முன்னணி நோயறிதலாகவும் உள்ளது என்றார்.

தொடர்ச்சி P2

PAGE 1 தொடர்ச்சிகள்

# 118,210 பேர் பாதிப்பு



இந்த இயற்கை அனர்த்தங்களால் கொலன்னாவையில் வீடொன்று முழுதாக சேதமடைந்துள்ளது. 235 வீடுகள் பகுதியளவில் சேதமடைந்துள்ளன. இயற்றை அனர்த்தங்கள் ஏற்படும் பொழுது, புதினம் பார்க்கச் செல்வதைத் தவிர்க்குமாறு அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது. இந்நிலையில், அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உடனடி நிவாரணம் வழங்குமாறு அதிகாரிகளுக்கு ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்க பணிப்புரை விடுத்துள்ளார்.

சீரற்ற காலநிலை காரணமாக வெள்ளம் மற்றும் மண்சரிவினால் பாதிக்கப்பட்ட மாவட்டங்களில் உள்ள மக்களின் பாதுகாப்பு தொடர்பில் விசேட அவதானத்துடன் செயற்படுமாறும், நிவாரணப் பணிகளை வினைத்திறனாக செயற்படுத்துவதற்குத் தேவையான ஒத்துழைப்பை வழங்குமாறும் பாதுகாப்பு அமைச்சின் செயலாளருக்கு, ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க அறிவித்துள்ளார்.

அவசரகால நிலைமையால் பாதிக்கப்பட்ட அனைத்து மக்களுக்கும் தேவையான நிவாரணங்களை வழங்க அரசாங்கம் செயற்பட்டு வருவதாகக் குறிப்பிட்ட ஜனாதிபதி, அந்தந்த மாகாணங்களின் அரச அதிகாரிகளைத் தொடர்பு கொண்டு எதிர்காலத்தில் அந்த நிவாரணங்களை மக்கள் பெற்றுக்கொள்ள முடியும் என்றும் தெரிவித்தார். அதுவரை மக்கள் அவதானமாக இருக்குமாறும் ஜனாதிபதி கேட்டுக்கொண்டார்.

இந்த நிவாரணப் பணிகளுக்காக 50 மில்லியன் ரூபாவை ஒதுக்குமாறு நிதியமைச்சிற்கு பணிப்புரை விடுத்த ஜனாதிபதி, உரிய நிவாரணங்களை முறையாக மக்களுக்கு வழங்குவதற்கு நன்கு ஒருங்கிணைந்து செயற்படுமாறும் அரச அதிகாரிகளுக்கு மேலும் அறிவித்துள்ளார்.

23 நிவாரண மையங்களில், 584 குடும்பங்களைச் சேர்ந்த 2,200 பேர் தற்போது பாதுகாப்பாகத் தங்க வைக்கப்பட்டுள்ளனர். பாதுகாப்புப் படைகளின் பிரதானி அலுவலகத்தின் ஊடாக, அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட அனைத்து மாவட்டங்களிலும் அரச அதிகாரிகளின் ஒருங்கிணைப்புடன் நிவாரணப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

அவசரகால நிலைமைகள் பற்றிய தகவல்களை, அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் 117 அழைப்பு நிலையம் மற்றும் 0112136136, 0112136222, 0112670002 என்ற தொலைபேசி இலக்கங்கள் மூலம் தெரிவிக்கலாம்.



## விமான படையினர் உஷார்

பேரிடர் சூழ்நிலைகளை வானத்தில் இருந்து கண்காணிக்கவும், கண்காணிப்பு விமானங்கள் தயார் நிலையில் இருப்பதை உறுதி செய்யவும் அவர் விமானப்படைக்கு அறிவுறுத்தினார்.

மேலும், பெல்-412 உலங்குவானூர்தி இரத்மலானை விமானப்படைத் தளத்தில் நிலைநிறுத்தப்பட்டுள்ளது, அதேவேளை இரண்டு பெல்-212 உலங்குவானூர்திகள் ஹிங்குராங்கொட மற்றும் பலாலி விமானப்படைத் தளங்களில் நிலைநிறுத்தப்பட்டுள்ளன. சிறப்புப் பயிற்சி பெற்ற விமானப்படை ரெஜிமென்ட் சிறப்புப் படைகளும் இந்த தளங்களில் தயார் நிலையில் உள்ளதாகவும், தேவைப்படும் போது மீட்பு நடவடிக்கைகளில் உதவுவதாகவும் செய்தித் தொடர்பாளர் கூறினார்.

## 41 பேர் நீர்க் கட்டணம் செலுத்தவில்லை

இவ்வாறு அறவிடப்படாது நிலுவையில் உள்ள தொகை 9 மில்லியன் ரூபாவாகும் என்றும் அந்த சபை தெரிவித்துள்ளது.

பொது விதிகளுக்கு அமையக் குறித்த பாராளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் அமைச்சர்களுக்கு எதிராகச் சட்ட நடவடிக்கை எடுக்கப்படுமெனச் சபை குறிப்பிட்டுள்ளது.

எவ்வித விசேட சலுகைகளும் இன்றி சுற்றறிக்கைகளுக்கு அமைய அவர்களுக்கு எதிராகச் சட்ட நடவடிக்கை எடுக்கப்படுமெனத் தேசிய நீர்வழங்கல் வடிகாலமைப்பு சபை குறிப்பிட்டுள்ளது.

## கடமைக்குத் தவறினால் ஒரு இலட்ச ரூபாய் தண்டம்

சம்பந்தப்பட்ட சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு அவர்களுக்கு இத்தண்டனை வழங்கப்படும் என்றும் அவர் தெரிவித்துள்ளார். தபால் மூல வாக்களிப்புக்கு விண்ணப்பித்திருக்காமை மற்றும் விண்ணப்பத்தை நிராகரித்திருந்தமை என்பவை தேர்தல் கடமைகளிலிருந்து விடுவிப்பதற்கான காரணமல்ல என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

அத்துடன் தாம், தேர்தல் கடமைகளில் ஈடுபடும் சேவை நிலையத்துக்கு வருகை தந்த பின்னர் வருகைக்கான சான்றிதழை நிறுவனத்தின் தலைவருக்கு சமர்ப்பிப்பது அவசியம் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

தேர்தல் கடமைகளுக்கு சமூகமளிக்காத அதிகாரிகள் நாட்டின் அரசியலமைப்புக்கு இணங்க, தேர்தல் ஆணைக்குழுவுடன் ஒத்துழைப்புடன் செயல்படுவதை நிராகரித்துள்ளதாக அல்லது அதற்கு தகுதி இல்லாத நபர் எனக் கணிக்கப்படுவார் என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.



## கும்ப நீரில் குளித்தார் வடிவேல்

பெருந்தோட்டங்களில் தேர்தல் பிரசாரத்தை ஆரம்பிக்கும் முன் வடிவேல் சுரேஷ் ஹலிஎல்ல தோட்டத்தில் தனது கட்சி அலுவலகத்தைத் திறந்து வைத்து இந்து முறைப்படி பூஜையில் கலந்து கொண்டு, கும்ப நீரில் நீராடினார்.

## சதாவின் சகோதரர் வீட்டில் இருந்து வாகனம் மீட்பு

இதற்கமைய நுவரெலியா பொலிஸாருக்கு கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலையடுத்து சட்டவிரோதமாக மறைத்து வைக்கப்பட்ட நிலையில், குறித்த வாகனம் மீட்கப்பட்டு நுவரெலியா பொலிஸ் நிலையத்தில் பொலிஸாரின் பாதுகாப்பில் வைக்கப்பட்டுள்ளதாக



பொலிஸார் தெரிவித்தனர்.

சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை நுவரெலியா பொலிஸார். மேற்கொண்டு வருகின்றனர்

## 18 பேர் இதுவரை கையளிக்கவில்லை

அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகள் அல்லது வேட்பாளரை முன்மொழிந்த தரப்பு இந்த பிரசார வரவு - செலவு அறிக்கையைச் சமர்ப்பிக்க வேண்டும்.

இந்த ஆண்டு ஜனாதிபதித் தேர்தலில் 38 வேட்பாளர்கள் போட்டியிட்டனர்.

பிரசார வரவு - செலவு அறிக்கையை, ஞாயிற்றுக்கிழமை (13) க்குள் சமர்ப்பிக்குமாறு ஜனாதிபதி வேட்பாளர்களுக்குத் தேர்தல் ஆணைக்குழு அறிவித்திருந்தது.

குறித்த அறிக்கைகளைச் சமர்ப்பிக்காத வேட்பாளர்களுக்கு எதிராகச் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என ஆணைக்குழு குறிப்பிட்டுள்ளது.

நீதிமன்றத்தில் குறித்த வேட்பாளர்கள் குற்றவாளியாக நிரூபிக்கப்பட்டால் அவர்கள் தமது வாக்குரிமை மற்றும் ஆசனத்தை இழக்க நேரிடுமெனவும் தேர்தல் ஆணைக்குழு எச்சரித்துள்ளது.

குறித்த வேட்பாளர்களுக்கு எதிராக 100,000 ரூபாய் தண்டப்பணம் விதிக்கப்படுமெனவும் தேசிய தேர்தல் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

## "புற்றுநோய் பாதிப்புகள் 77% அதிகரிக்கும்"



உள்நாட்டிலும் உலக அளவிலும் புற்றுநோயின் பெருகிவரும் நிலைமையை எடுத்துரைத்த அவர், 2050 ஆம் ஆண்டில் உலகளவில் புற்றுநோய் பாதிப்புகள் 77% அதிகரிக்கும் என்று எச்சரித்தார், குறிப்பாகக் குறைந்த வருமானம் கொண்ட நாடுகளில் இதன் தாக்கம் அதிகரிக்கும் என்றார்..

இந்த எழுச்சியைச் சமாளிக்க, புகையிலை பயன்பாடு, மது அருந்துதல், ஆரோக்கியமற்ற உணவுப் பழக்கம் மற்றும் உடல் உழைப்பு இல்லாமை போன்ற ஆபத்து காரணிகளைக் குறைப்பதில் கவனம் செலுத்துமாறு இலங்கையர்களை டாக்டர் மஹிபால வலியுறுத்தினார்.

பெரும்பாலான புற்றுநோய் நிகழ்வுகளை வாழ்க்கை முறை மாற்றங்களால் தடுக்க முடியும் என்றும், ஒரு சிறிய பகுதி மட்டுமே மரபணு காரணிகளால் ஏற்படுவதாகவும் அவர் சுட்டிக்காட்டினார்.

"2022 முதல் உலகளாவிய புற்றுநோய் புள்ளிவிவரங்கள் கிட்டத்தட்ட 20 மில்லியன் புதிய எண்ணிக்கைகள் மற்றும் 10 மில்லியன் இறப்புகளைக் காட்டுகின்றன.

இலங்கையில், மார்பக, வாய், நுரையீரல் மற்றும் பெருங்குடல் புற்றுநோய்கள் மிகவும் ஆபத்தான வடிவங்களாக இருக்கின்றன. கடந்த ஆண்டில் மட்டும் 4,555 பெண்களுக்கு மார்பகப் புற்றுநோய் இருப்பது கண்டறியப்பட்டது, அதே சமயம் 1,990 ஆண்களுக்கு வாய் புற்றுநோய் இருப்பது கண்டறியப்பட்டது," என்று டாக்டர் மஹிபால மேலும் கூறினார்.

## வீடுகளை கட்டுவதற்கான நிதிக்கு நடந்தது என்ன?

### ஜனாதிபதியிடம் ஜீவன் கேள்வி

ஆ.ரமேஸ்

நுவரெலியா மாவட்டத்தில் இம்முறை சேவலின் வழியில் யானை பயணிப்பதால் வெற்றி நிச்சயம் என முன்னாள் அமைச்சரும் இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் பொதுச் செயலாளருமான ஜீவன் தொண்டமான் தெரிவித்துள்ளார்.

நுவரெலியா மாவட்ட செயலகத்தில் ஊடகவியலாளர்களுக்குக் கருத்து தெரிவிக்கையில் அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது.

அனைத்து மலையக தலைமைகளும் இம்முறை ஒற்றுமையாக இணைந்து பாராளுமன்ற தேர்தலில் போட்டியிடுவதற்கு அழைத்தேன் அதேபோல கடந்த ஐந்து வருடமாக மலையகத்தில் அனைத்து கட்சி தலைமைகளும் ஒற்றுமையாகச் செயற்படுவதற்கு அழைப்பு விடுத்த போதிலும் அது நடக்கவில்லை.

ஆகையால் இம்முறை நுவரெலியா மாவட்டத்தில் அவரவர் தமக்கான கட்சிகளைத் தெரிவு செய்து போட்டியிடுகின்றனர்.

இந்த நிலையில், இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் மூவர் இம்மாவட்டத்தில் யானை சின்னத்தில் போட்டியிடுகிறது எம்முடன் ஐ.தே.கவை சேர்ந்த மேலும் பலர் போட்டியிடுகின்றனர்.

ஜனாதிபதி அனுரகுமார திஸாநாயக்க தலைமையிலான அரசாங்கம் பாராளுமன்றத்தில் பெரும்பான்மையைக் காட்டாவிட்டால் நாட்டில் மீண்டும் பாரிய பொருளாதார சிக்கல் ஏற்படும்.

முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க, கடந்த காலங்களில் உலக நாடுகளுக்கு நிதியுதவி தொடர்பாக முன்மொழியப்பட்டு இருந்தமையினால் தற்போது புதிய அரசாங்கத்திற்கு உலக நாடுகள் நிதிகளை வழங்க முன்வந்துள்ளது.

நாட்டில் மீனவர்களுக்கும் விவசாயிகளுக்கு நிவாரண உதவிகளை வழங்கி ஆதரவை காட்டிவரும் ஜனாதிபதி அனுரகுமார திஸாநாயக்க, மலையக பெருந்தோட்ட தேயிலை தொழிலாளர்களுக்கு என்ன செய்துள்ளார்.

அதே நேரத்தில், நாம் தோட்டத் தொழிலாளர்களுக்கு சம்பள உயர்வு பெற்று தருவதாக வாக்குறுதி வழங்கினோம் அதேபோல் இம்முறை 1,350 ரூபாய் சம்பள உயர்வு தொழிலாளர்கள் கரம் கிடைத்தது .ஆகையால் மக்கள் சிந்தித்து வாக்களிக்க வேண்டும்.




அத்துடன் கடந்த அரசாங்கத்தில் பெருந்தோட்ட பகுதிகளில் வீடுகள் கட்டுவதற்கு நிதியை அமைச்சு ஒதுங்கியிருந்த இவ்வாறு ஒதுக்கப்பட்டிருந்த நிதிக்கு தற்போது என்ன நடந்துள்ளது என்பதை ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்க அரசு எமக்கு தெரிவிக்க வேண்டும் எனவும் சுட்டிக்காட்டினார்.

## போதையில் நீராட சென்றவர்களை தடுத்த பொலிஸார் மீது தாக்குதல்

கனகராசா சரவணன்

வாழைச்சேனை, பாசிக்குடா கடற்கரையில் மதுபோதையில் கடலில் நீராடச் சென்ற குழுவினரைத் தடுத்து நிறுத்திய பொலிஸார் மீது தாக்குதல் நடத்தியதில் இரு பொலிஸார் காயமடைந்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். தாக்குதலை மேற்கொண்ட ஒருவரைக் கைது செய்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த சம்பவம் சனிக்கிழமை (12) மாலையில் இடம்பெற்றுள்ளதாக கல்குடா பொலிஸார் குறிப்பிட்டனர்.

பொலன்னறுவை, செவனபிட்டியாவைச் சேர்ந்த குழுவினர் சம்பவ தினமான சனிக்கிழமை (12) பகல் உல்லாச பயணம் மேற்கொண்டு பாசிக்குடா கடற்கரையில் பொழுதைப் போக்கிக் கொண்டதுடன், அங்கு மதுபானம் அருந்திய பின்னர் கடலில் நீராட முயற்சித்துள்ளனர்.

எனினும், அங்குக் காவல் கடமையில் இருந்த பொலிஸார் மதுபோதையில் நீராடக் கூடாது கடல் ஆபத்தானது உயிருக்கு ஏதாவது நடக்கும்.

எனவே மது போதை இல்லாத நிலையில் தாராளமாக நீராடமுடியும் என தெரிவித்து அவர்களைத் தடுத்தனர்.

இதன்போது மதுபோதையில் இருந்தவர்களுக்கும் பொலிஸாருக்கும் இடையே வாக்குவாதம் ஏற்பட்ட நிலையில் பொலிஸார் மீது மதுபோதையில் இருந்தவர்கள் தாக்குதலை மேற்கொண்டதையடுத்து இரு பொலிஸார் காயமடைந்தனர்.

பொலிஸாரின் கடமைக்குப் பங்கம் விளைவித்த குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டவரை நீதிமன்றில் முன்னிறுத்த நடவடிக்கை எடுத்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

# முன் எச்சரிக்கை...



நிலவி வரும் சீரற்ற காலநிலையுடன் அவசர நிலை ஏற்படுமிடத்து, பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணம் வழங்கவும் அனர்த்த முகாமைத்துவ நடவடிக்கைகளின் பொறுப்பான நிறுவனங்களுக்குப் பூரண ஆதரவு வழங்குவதற்கு எந்தவொரு சந்தர்ப்பத்திலும் செயல்படுவதற்காக அனைத்து பாதுகாப்புப் படையினரையும் தயார் செய்யுமாறும் இராணுவத் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் விக்கும் லியனகே, படைத் தளபதி மற்றும் அனைத்து பாதுகாப்புப் படையினருக்குக் கட்டளையிட்டுள்ளார்.

அதன்படி, களனி கங்கையின் நீர் மட்டம் அதிகரித்துள்ள நிலையில், கடுவெல பிரதேசத்தில் உள்ள போமிரிய கால்வாய் கரையிலும், களனிமுல்ல,கொஹிலவத்தை பகுதியிலுள்ள மற்றுமொரு கால்வாயிலும் மணல் மூட்டைகளைப் பரப்பி வெள்ள அபாயத்தைக் குறைக்கும் பணியில் இலங்கை இராணுவத்தின் 2வது இலங்கை காலாட்படையினர் ஈடுபட்டுள்ளனர்.















'தமிழ்த் தேசியம்' பேசுவோரிடம்

# "வேலைத்திட்டம் இல்லை"

■ கனகராசா சரவணன்

வடக்கு, கிழக்கில் ஈழ மக்கள் ஜனநாயக கட்சி (ஈ.பி.டி.பி.) கனிசமான ஆசனங்ளை பெற்றுக் கொண்டு ஆட்சியமைக்கின்ற அரசாங்கத்துடன் பேரம் பேசி செயற்படுவோம். எனவே, வீணைச் சின்னத்தில் போட்டியிடும் எங்களுக்கு வாக்களித்து எங்களை வெற்றிபெறச் செய்யவேண்டும் என மட்டக்களப்பு மக்களை அன்பாகக் கேட்டுக் கொள்கின்றோம் என ஈ.பி.டி.பி. கட்சி மாவட்ட அமைப்பாளர் சிவானந்தராசா கோரிக்கை விடுத்துள்ளார்.

தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்களை அறிமுகம் செய்தலும், ஊடக மாநாடும் மட்டக்களப்பு ஈ.பி.டி.பி. காரியாலயத்தில் ஞாயிற்றுக்கிழமை(13) இடம்பெற்றபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.



மேலும், "1994இல் இருந்து நாங்கள் இன்று வரை சகல மாவட்டங்களில் தேர்தல் களத்தில் இருந்தோம். அந்த வகையில், இந்த முறையும் தேர்தலில் தூய உள்ளம் கொண்ட வேட்பாளர்களைத் தெரிவு போட்டியிடுகின்றோம். நாங்கள் வட மாகாணத்தில் கிடைத்த ஆசனத்தை வைத்துக் கொண்டு பல வேலைத்திட்டங்னை செய்தோம். அந்த வகையில், மீனவர்களுக்கான மானியங்கள் வழங்கியிருந்தோம். இந்த நிலையில் ஜனாதிபதி தேர்தல் இடம்பெற்று ஆட்சி மாற்றம் இடம்பெற்றுள்ளது. ஆனால், நாங்கள் ஆரம்பித்த வேலைத் திட்டம் இடை நடுவில் விடப்பட்டுள்ளது. இது தொடர்பாக எமது கட்சி செயலாளர் டக்ளஸ் தேவானந்தா, நாங்கள் தொடங்கிய வேலையை முடிக்க வேண்டும் என தற்போதைய ஜனாதிபதியிடம் கேட்டுள்ளார் அது கட்டாயமாக நடைபெறும்.

இருந்தபோதும், இவ்வளவு காலமும் தமிழ்த் தேசியம் என பேசிக் கொண்ட அரசியல்வாதிகளால் மக்களின் அபிவிருத்திக்கான வேலைத் திட்டம் எதுவும் நடந்ததில்லை. ஆனால், நாங்கள் மாவட்டத்தில் பல்வேறு அபிவிருத்திகளைச் செய்து வந்திருக்கின்றோம் என்றார்.

அத்துடன், இதன்போது கட்சியின் மாவட்ட அமைப்பாளரான மாமா என்றழைக்கப்படும் தம்பிப்பிள்ளை சிவானந்தராசா தலைமையில், கொக்கட்டிச்சோலை முன்னாள் பிரதேசசபை உறுப்பினர் பாக்கியராசா பாஸ்கரன், அன்ரனி சில் ராஜ்குமார், தம்பிராசா ஆனந்தராசா, கிருஸ்ணபிள்ளை மதனகுமார், புனிதாசன் சிறீக்காந், புதுமலசிங்கம் அருணஉதயன், இராசையா லில்லி ஜெயராணி ஆகிய 8 புதிய வேட்பாளர்கள் அறிமுகம் செய்து வைத்துள்ளனர்.

ஈழ மக்கள் ஜனநாயக கட்சி (ஈ.பி.டி.பி.) கட்சி வடக்கு, கிழக்கு அனைத்து மாவட்டங்களிலும் கொழும்பு மாவட்டத்திலும் போட்டியிடுகின்றது.

# மோட்டார் சைக்கிள் விபத்தில் ஒருவர் மரணம்

■ எம்.யூ.எம்.சனூண்

புத்தளம்- கற்பிட்டி பகுதியில் இருந்து பாலாவி நோக்கிச் சென்ற மோட்டார் சைக்கிள் ஒன்று கட்டுப்பாட்டை இழந்து, வீதியை விட்டு விலகி விபத்துக்குள்ளானதில் ஒருவர் உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இவ்விபத்தில் உயிரிழந்தவர், ஆனமடுவ தோனிகலைப் பகுதியைச் சேர்ந்த 35 வயதுடைய இராணுவ சிப்பாய் எனவும் புத்தளம் புனர்வாழ்வு நிலையத்தில் கடமையாற்றி வந்துள்ளதாகவும் தெரியவந்துள்ளது.

உயிரிழந்தவரின் சடலம் புத்தளம் ஆதார வைத்தியசாலையில் பிரேத அரையில் வைக்கப்பட்டுள்ளதுடன், இவ்விபத்து தொடர்பில் மேலதிக விசாரணைகளை புத்தளம் பொலிஸார் மேற்கொண்டு வருவதாகக் குறிப்பிட்டுள்ளனர்.



# 'சோழன்' உலக சாதனை படைத்தார்

# திருமலை சிறுமி தாரா



அதிக ஞாபகத் திறன் மூலம் திருகோணமலை சேர்ந்த 3 வருடங்களும் 11 மாதங்களுமான தாரா என்ற சிறுமி 'சோழன்' உலக சாதனை திருகோணமலை உவர்மலை விவேகானந்தா கல்லூரியில் வைத்து சனிக்கிழமை (12) படைத்துள்ளார்.

தவழும் பருவத்தில் இருந்தே அதிக ஞாபகத் திறனுடன் இருப்பதைக் கண்டறிந்த அவருடைய பெற்றோர் பிரேம்ராஜ் மற்றும் வைதேகி தம்பதியரின் மகளுக்குத் தொடர் பயிற்சியளித்ததன் விளைவாகச் சோழன் உலக சாதனையைப் படைத்துள்ளார்.

சோழன் உலக சாதனைப் புத்தக நிறுவனத்தின் நடுவர்கள் முன்னிலையில் வைத்து 2 முதல் 7 வரையான பெருக்கல் வாய்ப்பாடுகள், தனிம வரிசை அட்டவணையின் 50 கூறுகள், மனித உடல் உறுப்புகள் 6இன் உட்பாகங்கள் போன்றவற்றைக் கூறிய அதேவேளை, 100 சமூக ஊடகங்களின் சின்னங்களையும் பிழையின்றி அடையாளம் காட்டினார்.

இவரது முயற்சியை முறைப்படி கண்காணித்துப் பரிசோதித்த சோழன் உலக சாதனைப் புத்தக நிறுவனத்தின் திருகோணமலை மாவட்டத் தலைவர் எம்.தனராஜ், மட்டக்களப்பு மாவட்டத் தலைவர் கதிரவன் த.இன்பராசா, திருகோணமலை மாவட்டப் பொதுச் செயலாளர் சுயன்தன் விக்னேஷ்வர ராஜா மற்றும் மட்டக்களப்பு மாவட்டப் பொதுச் செயலாளர் சிவ வரதகரன் போன்றோர் சிறுமியின் முயற்சியை உலக சாதனையாகப் பதிவு செய்தனர்.

சோழன் உலக சாதனை படைத்த சிறுமி பிரேம் ராஜ் தாராவிற்கு சட்டகம் செய்யப்பட்ட சான்றிதழ், நினைவுக் கேடயம், தங்கப் பதக்கம், அடையாள அட்டை மற்றும் பைல் போன்றவை சோழன் உலக சாதனைப் புத்தக நிறுவனத்தின் நடுவர்கள், மற்றும் சிறப்பு விருந்தினர்களினால் வழங்கிப் பாராட்டப்பட்டது.

சோழன் உலக சாதனைப் புத்தக நிறுவனம் மற்றும் பீபல்ஸ் ஹெல்பிங் பீபல்ஸ் பவுண்டேஷன் போன்ற அமைப்புகள் இணைந்து நடத்தியிருந்த இந்த நிகழ்வில் கிழக்கு மாகாண ஆளுநரின் பிரத்தியேக செயலாளர் வி.ராஜசேகரன், நகராட்சி மன்றச் செயலாளர் ஜெய விஷ்ணு, பொலிஸ் அதிகாரி ஜெய்ஸ், உவர்மலை விவேகானந்தா கல்லூரியின் ஆரம்பப் பிரிவின் தலைமை ஆசிரியர் மதன் துஷாந்தி, மாவட்ட இளைஞர் சேவைகள் அமைப்பின் தலைமை அலுவலர் யுவராஜ் குமார், பீபல்ஸ் ஹெல்பிங் பீபில்ஸ் பவுண்டேஷன் சார்பாக கோணேஸ்வரநாதன் தவமலர் போன்றோர் சிறப்பு விருந்தினர்களாகப் பங்கு கொண்டனர்.

சோழன் உலக சாதனைப் புத்தக நிறுவனத்தின் நிறுவனர் முனைவர் நீலமேகம் நிமலன் உலக சாதனை படைத்த சிறுமி தாராவை இந்தியாவிலிருந்து காணொளிக் காட்சியூடாக வாழ்த்திப் பாராட்டினார்.

# சிறையில் இருந்து ஸ்மார்ட் போன் மீட்பு

பூஸ்ஸ உயர்பாதுகாப்புச் சிறைச்சாலையின் அறைகளுக்கு அருகில் மறைத்து வைக்கப்பட்டிருந்த ஸ்மார்ட் கைப்பேசி மற்றும் பல கையடக்கக் கருவிகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. குறித்த சிறையில் ஒழுங்கமைக்கப்பட்ட குற்றவாளிகளான சஞ்சீவ குமார சமரத்ன, கணேமுல்ல சஞ்சீவ மற்றும் சமந்த குமார என்ற 'வெலே சுதா' ஆகியோர் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

சிறைச்சாலையின் சிறப்புப் பிரிவில் உள்ள 44, 38 மற்றும் 37 ஆகிய அறைகளை சிறப்பு அதிரடிப்படையினரால் சனிக்கிழமை (12) அன்று அவசர சோதனை நடத்திய போது, கையடக்கத் தொலைபேசி, ஹேண்ட் ஃப்ரீ மற்றும் சார்ஜர் ஆகியவை மீட்கப்பட்டுள்ளன.

மீட்கப்பட்ட பொருட்கள் மேலதிக விசாரணைகளுக்காக சிறைச்சாலை அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# அரசாங்க அதிபர் விஜயம்



■ எம்.எப்.றிபாஸ்

அக்கரைப்பற்று கல்வி வலயத்துக்குட்பட்ட பாலமுனை அல் ஹிக்மா வித்தியாலயத்திற்கு அம்பாறை மாவட்ட அரசாங்க அதிபர் விஜயம் செய்துள்ளார்.

பாடசாலையின் நிறைவேற்று அபிவிருத்தி குழு குழுவினர் அண்மையில் அரசாங்க அதிபரைச் சந்தித்து பாடசாலைக்கு வருமாறு விடுத்த அழைப்பை ஏற்று அங்கு அவர் விஜயத்தை மேற்கொண்டுள்ளார்.

அதிபர் எஸ்.ஏ.ஜஸாஹிர் தலைமையிலான இடம்பெற்ற இந்நிகழ்வில், பாடசாலையின் அத்தியாவசிய தேவையாகவிருக்கின்ற வகுப்பறை பிரச்சினைகளையும் கேட்டறிந்துள்ளார்.

மேலும், மாவட்ட செயலகத்திலிருந்து பொறியியலாளர், பிரதித் திட்டமிடல் பணிப்பணிப்பாளர் மற்றும் வலயக்கல்விப்பணிப்பாளர் ஆகியோரும் கலந்து கொண்டியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# போதைப்பொருளுடன் ஒருவர் கைது

■ பு.கஜிந்தன்

யாழ்ப்பாணம் - இணுவில் வீதி, மானிப்பாய் பகுதியில் போதைப்பொருளை வைத்திருப்பதாக குற்றச்சாட்டில், பலசரக்கு வியாபார நிலையம் ஒன்றின் உரிமையாளர் கைது செய்யப்பட்டுள்ளார்.

யாழ். மாவட்ட பொலிஸ் புலனாய்வு பிரிவினருக்குக் கிடைத்த இரகசிய தகவலுக்கமைய மேற்கொண்ட தேடுதல் நடவடிக்கையின் போதே இக்கைது நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளது.



இது தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட விசாரணையில், தான் போதை குளிசை பாவிப்பதாகவும், தெரிந்த நபர்களுக்கு விற்பனை செய்வதாகவும் அவர் கூறியுள்ளார்.

மேலும் , குறித்த நபருடைய கடையின் பின் பகுதியில் பல போதை குளிசைகளும், வெற்று கவர்களும் கைப்பற்றப்பட்டுள்ளதுடன், மேலதிக விசாரணைகளின் பின்னர் அவரை நீதிமன்றில் முற்படுத்தபடுத்துவதற்கான நடவடிக்கைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# ரயிலில் மோதி மூவர் பலி

மாத்தறையில் இருந்து கொழும்பு நோக்கி சனிக்கிழமை (12) அன்று பயணித்த ரயிலில் மோதி 3 பேர் உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இருவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளதுடன், மூன்று வயது குழந்தை காயமடைந்த நிலையில், களுத்துறை போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் சிகிச்சைப் பலனின்றி உயிரிழந்துள்ளார்.

உயிரிழந்த மூவரும் களுத்துறை தெற்கு ரஜவத்த பிரதேசத்தைச் சேர்ந்தவர்கள் என தெரியவந்துள்ளது.



# சண்டையிடாமல் எதிர்கொண்டு வென்ற ‘ரத்தன் டாடா’

ரத்தன் டாடா, 2024 ஒக்டோபர் 11ஆம் திகதி புதன்கிழமையன்று நம்மை விட்டுப் பிரிந்து விட்டார். டாடா குழுமத்தை உலகப் புகழ்பெற்ற நிலைக்குக் கொண்டு வந்தவர். ரத்தன் ஒரு பரம்பரை குடும்பத்தில் பிறந்தார். செல்வச் செழிப்பான குடும்பங்களில் பிறந்த பிள்ளைகள் தங்கள் பரம்பரைப் பொருளைக் காப்பாற்றிக் கொள்ள விரும்பினாலும், குடும்ப பரம்பரை இன்பத்திற்கு அடிமையாகி சோம்பேறிகளாகவோ அல்லது வீண் விரயமாகவோ இருப்பது இத்தகைய குடும்பங்களின் பொதுவான பண்பு.

எளிமையான வாழ்க்கை வாழ்ந்த ரத்தன் டாடா, சிக்கலான சிந்தனை மற்றும் முறையான திட்டமிடல் மூலம் வணிக முடிவுகளை எடுத்தார். குடும்ப பாரம்பரியம் இருந்தாலும், ‘டாடா ஸ்டீல்’ நிறுவனத்தில் பயிற்சியாளராக பணியாற்றினார். ஆரம்பம் என்பதால், வியாபாரத்தில் ஏறி இறங்கும் எல்லா இடங்களுக்கும் ஒரே நேரத்தில் சிந்திக்கும் திறன் அவருக்கு இருந்தது. பட்டம் பெற்ற பிறகு, பல்வேறு நிறுவனங்களின் அறங்காவலராக இருந்தார்.

அந்த வகையில், ரத்தன் டாடாவை ‘சிறந்த புத்தகம்’ என்று சொல்லலாம். ‘உலகின் இரண்டாவது பொருளாதாரமாக இந்தியா உருவெடுக்கும் இலக்கு இந்திய அரசியல் கையின் ஒரே ஆசையோ திறமையோ அல்ல. அத்தகையவர்களின் நிபுணத்துவம் அதன் அடித்தளம். இந்த நாட்டின் எதிர்காலத்தைப் பார்க்கும் ரத்தன் டாடாவைப் பற்றி நாம் படிக்க வேண்டும்.

நாட்டின் உற்பத்திப் பொருளாதாரத்தை மேம்படுத்துவதற்கு அரசாங்கம் ஊக்குவிக்கும் அதே வேளையில், தனியார் தொழில்முனைவோர் தனது வேலையைச் செய்ய வேண்டும். இந்த நாட்டிற்கு வரும் ஒரு முதலீட்டாளர் அல்லது இந்த நாட்டில் ஒரு தொழிலதிபர் ஒரு புதிய பயணத்தை மேற்கொள்ளும் போது, அவர் மாகாணத்தில் உள்ள சண்டியா முதல் பாராளுமன்ற உறுப்பினர்கள், அமைச்சர்கள் போன்ற அனைவருக்கும் அஞ்சலி செலுத்த வேண்டும்.

ஒரு நாடு உலகை நோக்கி செல்வதற்கு பொருளாதார பலத்தை கொண்டு வருவது தொழிலதிபர் தான். ஈண்டு உற்பத்திக்கு முன்னுரிமை அளித்த தொழிலதிபர். ரத்தன் டாடா நவீன இந்தியாவை உலகிற்கு எடுத்துச் சென்ற அத்தகைய தொழிலதிபர்களில் ஒருவர். அந்த உதாரணம் இந்தியாவின் வாழ்க்கையை மாற்றியது. நாட்டின் பொருளாதாரம் வளர்ந்தது. இப்படிப்பட்டவர்கள் இந்தியாவை ஐரோப்பா வரை விரிவுபடுத்தினார்கள். டாடா என்ற பெயரைக் கேட்டதும், மெய் ஐம்பது வருடங்கள் தொலைவில், ஒரு தொழிற்சாலை நிலை போல் உணர்ந்தார். டாடா பஸ் கூட அந்த அளவில் இருந்தது. இன்று, டாடா உலகின் முன்னணி தொழில்துறை பெயர்களில் ஒன்றாகும்.

இது ஜப்பான், ஜேர்மனி, ஐரோப்பா மற்றும் அமெரிக்காவில் உள்ள தொழில்துறை நிறுவனங்களுடன் தொடர்புடைய பெயர். அத்தகைய பிராண்டைப் பிடித்துக் கொண்டு, உலக அளவில் தொழில்துறை உற்பத்தியில் இந்தியா முன்னேறிய நிலையை எட்டியுள்ளது. இந்த உதாரணத்தை மனதில் வைத்துக்கொண்டு முன்னேற வேண்டும். இந்திய தொழிலதிபர்கள் அனைவரும் கோடிக்கணக்கில் சம்பாதித்தனர். ரத்தன் டாடா வனாஹி கோடிக்கணக்கில் நன்கொடை அளித்தவர். அத்தகைய ஒரு தொழிலதிபர். ஒரு நாட்டையும் உலகையும் உருவாக்கிய அந்த மனிதன் தன் நாட்டு மக்களை அளவற்ற அன்பு செலுத்தினான். இந்த தொழில்முனைவு நம் நாட்டிற்கும் ஒரு ஒத்திகையாக இருக்கட்டும்.




தமிழ்Mirror www.tamilmirror.lk க்கு


எழுதுங்கள்

தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருத்துக்களையும் வரவேற்கின்றோம்.

அத்துடன், உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.

அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136
Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk




## வாழ்வியல் தரிசனம்

பண்டைய காலத்தில் உலக நாடுகளிடையே கொடிய யுத்தங்கள் தொடர்ந்த வண்ணம் இருக்கும். செழிப்பான நாடுகள், வேண்டுமென்றே சிலநாடுகளுக்கிடையில் யுத்தங்களை உருவாக்கிவிடும். இதனால், நன்கு ஆட்சி செய்த நாடுகள் தோற்பதும் உண்டு. பின்னர் அந்த நாட்டிலுள்ள வளங்கள் சூறையாடப்படும்.

அந்தச் செல்வங்களைத் தனது நாட்டுக்குக் கொண்டு செல்லப்படும். தனது நாட்டில் சிறப்பான ஆட்சியும் கைப்பற்றிய நாட்டில் கொடுங்கோல் ஆட்சியும் நடைபெறும். தோல்வி கண்ட அரசன், பிறநாட்டின் உதவியுடன் மீண்டும் தனது நாட்டைக் கைப்பற்றுவான்.

இதே முறையில்தான் ஒருநாட்டில் புரட்சியை ஏற்படுத்தியவர்கள், அந்த நாட்டை சர்வாதிகார நாடாக மாற்றிவிடுவார்கள். மக்களுக்காக உழைக்கின்றோம் என்பார்கள். ஆனால் மக்களைக் கண்டுகொள்ள மாட்டார்கள்.

இடையில் வாழும் மக்கள் நலிந்து, நசுங்கிப் போய்விடுவார்கள். நீதி, நியாயம், பொய் எல்லாமே மாறி,மாறி வந்துபோகும்.

யுத்தக் கிலி ஒருபோதும் முழுமையாக அகன்றுவிடுவதில்லை. நிம்மதி இல்லாமல் மக்கள் அகதிகளாகச் சிதறி ஓடுவார்கள். நிம்மதியை மனிதன்தான் சிதைக்கிறான். எப்போது முடியும் இந்த நிலை.

நன்றி–பருத்தியூர் பால.வயிரவநாதன்

# தமிழ்த் தேசிய நலன் மீதான அக்கறை

**லக்ஸ்மன்**

வடக்கு, கிழக்கில் தமிழ்த் தேசிய நலன் மீதான அக்கறை குறைந்து கொண்டே வருவதாக அவதானிகளது கருத்துக்கள் வெளிவந்து கொண்டிருக்கின்றன. தமிழர்களிடமுள்ள ஒற்றுமையில்லாமை அல்லது ஒற்றுமைப்படாமையினை சிங்களப் பேரினவாதம் தனது பிரித்தாளும் சூழ்ச்சிமூலம் வெளியில் கொண்டுவந்து பல விடயங்களை வரலாற்றில் சாதித்திருக்கிறது. அதற்கு அவர்கள் சில சுயநல சிந்தனைகளைத் தூண்டிவிடுவது, நெருக்குதல்களை உருவாக்குவது, வரப்பிரசாதங்கள் என்ற அடிப்படையில் வெகுமதிகளை வழங்குதல் என பல வழிகளைப் பயன்படுத்திவந்தனர். இப்போதும் அதனையே செய்து வருகின்றனர். இவற்றுக்கு அடிமையாகும் தமிழர்களை என்னவென்று சொல்வது. அதற்கு வெறுமனே சிங்களவர்களின் அரசியலை மாத்திரம் காரணமாகச் சொல்லிவிட முடியாதது. குற்றஞ்சாட்டவும் முடியாது.

தனிப்பட்ட நலன்களுக்காகவும், தனிப்பட்ட வெற்றிகளுக்காகவும், வசதி, வாய்ப்புகளுக்காகவும் தமிழ் மக்களின் வாக்குகளைப் பெற்றுப் பயன்படுத்தும் ஒரு விரும்பத்தகாத அரசியல் செயற்பாடே நடைபெற்றுவருவதாகவும் குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டுவந்தன. அதனாலும் தமிழ்த் தேசிய நலனில் மக்களுக்கிருந்த அக்கறை குறைந்து வந்திருக்கிறது.

மட்டக்களப்பில் சனிக்கிழமை நடைபெற்ற இலங்கை தமிழ் அரசுக் கட்சியின் சார்பில் மட்டக்களப்பு மாவட்டத்தில் பாராளுமன்றத் தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்களின் அறிமுக நிகழ்வில் கருத்துத் தெரிவித்துள்ள அக் கட்சியின் மட்டக்களப்பு மாவட்ட முதன்மை வேட்பாளரும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினருமான இரா.சாணக்கியன், தமிழ்த் தேசிய பரப்பில் கொலை செய்யாதவர்கள், கடத்தல் செய்யாதவர்கள், காட்டிக் கொடுக்காதவர்கள், இலங்கை தமிழரசுக் கட்சி சின்னத்தில் மட்டுமே போட்டியிடுகின்றனர். ஏனைய கட்சிகளில் இவ்வாறான தமிழ் மக்களுக்கு எதிரான செயற்பாடுகளை முன்னெடுத்தவர்கள் வேட்பாளர்களாக நிறுத்தப்பட்டுள்ளார்கள் என்று தெரிவித்திருக்கிறார்.

அவரது கருத்து தேர்தல் மேடைகளில் மக்களை தம்முடைய எதிர்காலம் குறித்துச் சிந்திக்கச் செய்யும் என்பதில் மாற்றுக் கருத்தில்லையானாலும், தன்னுடைய கட்சியின் இயலாமையினால்கூட இவ்வாறான கருத்து வெளிப்பட்டிருக்கலாம் என்ற விமர்சனத்தை ஏற்படுத்தியிருக்கிறது. தமிழர்களின் தாய்க் கட்சி என்று சொல்லப்படும் கட்சியின் ஒரு மாவட்டத்துக்கான தலைமை வேட்பாளருடைய கருத்துக்கள் தமிழ் மக்களிடையே குழப்பங்களை ஏற்படுத்தியதாக இருக்கவேண்டும் என்பது முக்கியமானது.

தமிழ்த் தேசிய அரசியல் என்பது வெறுமனே சீராகவும் எந்தவொரு விமர்சனங்களுக்கும், விலகல்கள், பிளவுகள், பிரிதல்கள், காட்டிக்கொடுப்புகள், பிரித்தெடுத்தல்கள், கட்சி மாறல்களுக்கும் உட்படாத ஒன்றல்ல. தம்முடைய வெற்றிவாய்ப்பினை அதிகரித்துக் கொள்வதற்காக சேறு பூசும் அரசியல் தமிழ்த் தேசியத்தில் மாத்திரமல்ல, பெரும்பான்மைக் கட்சிகளிலும் காணப்படுகின்ற ஒன்றே. இருந்தாலும், இவ்வாறான கருத்துக்கள் வளர்ந்து வருகின்ற நாகரீக அரசியலுக்கு ஏற்றதல்ல. இவ்வாறான கருத்துக்கள் தமிழர் அரசியலில் அக்கறை கொண்டவை என்று கூறவும் முடியாது.

இம்முறை, வடக்கு கிழக்கில் இலங்கைத் தமிழரசுக் கட்சி, ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணி, அகில இலங்கை தமிழ் காங்கிரஸ், தமிழ்த் தேசியக் கட்சி, தமிழர் விடுதலைக் கூட்டணி, ஈரோஸ் ஜனநாயக முன்னணி, ஈ.பி.டி.பி, தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் ஆகிய கட்சிகள் பிரதானமாகப் போட்டியிடுகின்றன. இக் கட்சிகளில் போட்டியிடுபவர்கள் அனைவரும் ஏதோ ஒருவகையில் தமிழ் மக்களுடைய நலன் சார்ந்தே அரசியலை நடத்துகின்றன. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிலிருந்து தாமாக வெளியேறிய இலங்கைத் தமிழரசுக் கட்சியானது ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியாக உள்ள கட்சிகளுடன் எந்தவிதத்திலும் உடன்பாட்டுக்கு வராது வடக்குக் கிழக்கில் திருகோணமலை தவிர ஏனைய தேர்தல் மாவட்டங்களில் தனித்தே போட்டியிடுகின்றது. இறுதி நேரத்தில் அம்பாறையில் இணைந்து போட்டியிடுதல் என்ற நிலைப்பாட்டினை ஏற்றுக் கொள்ளாது தனித்தே வேட்பு மனுவினைச் சமர்ப்பித்திருக்கின்றனர்.

ஒத்துவராத தன்மையும், விட்டுக்கொடுப்பில்லா செயற்பாடுகளும், மேட்டுக்குடி முன்னெடுப்புகளும், மேலாதிக்க மனோபாவமுமே நீண்டகாலமாகத் தமிழர்களுடைய விடுதலைப்போராட்டம் இழுத்தடிக்கப்பட்டமைக்கும் வீணேயானதற்குமான காரணம் என்பதனை இதுவரையில் உணர்ந்து கொள்ளாதவர்களாகத் தமிழ்த் தேசிய அரசியல் கட்சிகள் இருந்து வருகின்றன. சிவில் அமைப்புகள், பொது அமைப்புகள் என பலராலுரும் பலவாறும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டும் ஒருமிப்பு ஏற்படவில்லை என்பது கவலையானதே.

தமிழ்த் தேசிய இனப் பிரச்சினைக்கான அரசியல் தீர்விற்காகத் தமிழ்த் தேசிய அரசியல் கட்சிகளை ஒன்றிணைய வேண்டும் என்பது நடைபெறவுள்ள பாராளுமன்றத் தேர்தல் அறிவிக்கப்பட்டது முதலல்ல, நீண்டகாலமாகக் கட்சிகளிடையே இருக்கின்ற பிளவுகள் காரணமாகத் தொடர்ச்சியாகவே முன்வைக்கப்பட்டு வருகின்ற கோரிக்கையாகும்.

வடக்கு, கிழக்கு தமிழ் மக்கள் எதிர்கொண்டு வரும் அரச இனவாத அடக்குமுறையில் இருந்து மீண்டு கௌரவமான, உரிமைகளை அனுபவிக்கும் பிரஜைகளாக வாழ வேண்டுமாயின், நிலையான அரசியல் தீர்வொன்றே முடிவு. அதற்கு ஒருங்கிணைந்த வடக்கு கிழக்கு மாகாணத்திற்கு மீளப் பெறமுடியாத சமஷ்டி முறையிலான தீர்வொன்றே திட்டவட்டமானதாக இருக்கும் என்பது நீண்டகாலமாக அரசியல் செயற்பாட்டில் ஈடுபட்டுவரும் அனைவருக்கும் தெரிந்த விடயமாகும். ஆனால், அதனை அடைவதற்கான வழிகளைக் கண்டடைவதிலேயே கால இழுத்தடிப்புகள் காணப்படுகின்றன. அதற்குச் சிங்களப் பேரினவாதம் மாத்திரமல்ல, தமிழர்களும் காரணமே. இதனைத் தமிழ்த் தேசிய அரசியல் கட்சிகள் மாத்திரமல்ல, அனைத்துத் தமிழ்க் கட்சிகளும் ஏற்றுக்கொள்ளவே வேண்டும்.

இந்த நிலையில்தான் தனிப்பட்ட வாக்கு வங்கிகளை நிரப்புவதை மாத்திரமே நம்பிக் கொண்டிருக்கும் அரசியலிலிருந்து தமிழ்த் தேசிய அரசியல் வெளியில் வந்தாகவேண்டும். தமிழ்த் தேசியத்துக்கான வாக்கு வங்கியை அதிகரிப்பதற்கே முயற்சிக்கவேண்டும். இதனை ஏற்றுக் கொள்வதற்குத் தமிழ் அரசியல்வாதிகள் தயாரில்லையானாலும் ஏற்றுக்கொண்டேயாகவேண்டும்.

இந்த இடத்தில் மக்களை அரசியல் மயப்படுத்துவது, தமிழர்களின் நிலைப்பாடு சார் தெளிவுபடுத்தல்கள் கட்டாயமானது. மக்களின் அரசியல் நிலைப்பாடுகள் புடம்போடப்படும் காலமாக ஜனாதிபதித் தேர்தலில் தமிழ்ப் பொது வேட்பாளர் ஊடாக ஓரளவுக்கு மேற்கொள்ளப்பட்டிருக்கிறது. இந்த படியெடுப்புடன் தொடர்வதாக இருக்கவேண்டியது கட்டாயமாகும். நாடாளுமன்றத் தேர்தல் பிரசாரங்கள் மக்களது அரசியல் நிலைப்பாடு சார் தெளிவுபடுத்தல்களுக்கானதாக அல்லாமல் குழப்பங்களை ஏற்படுத்துவதாக இருந்துவிடக்கூடாது என்பது மிகக் கவனகமாக கடைப்பிடிக்கப்பட வேண்டும்.

தேர்தல்கள் விமர்சனங்களுக்கும், ஏச்சுக்களுக்கும், பேச்சுக்களுக்கும், அவதூறுப் பேச்சுக்களுக்கும் ஏதுவானதே. இருந்தாலும், அதனை மட்டுப்படுத்திக் கொள்வதும், விமர்சனங்கள் அவதூறுகளுக்கு விளக்கம் கொடுக்கவேண்டியது அதனை எதிர்கொள்பவருடைய கடமையாகும். இல்லையானால், அவற்றை ஏற்றுக்கொண்டதற்கு ஒப்பாகும்.

ஜனாதிபதித் தேர்தலும் அத் தேர்தல் தொடர்பான பரப்புரைகளும் தற்போதைய காலத்தில் நாடாளுமன்றத் தேர்தல் தொடர்பிலும் பலவாறான ஆராய்வுகளுக்கு உட்பட்டிருக்கிறது. இருந்தாலும் ஜனாதிபதித் தேர்தல் அலையானது பாராளுமன்றத் தேர்தல், மாகாண சபைத் தேர்தல்களில் முழுக்க முழுக்க ஆதிக்கம் செலுத்தாது என்பதே யதார்த்தமாகும்.

எது எவ்வாறானாலும், ஒவ்வொரு தமிழ்க் கட்சிகளும் தம்முடைய தேர்தல் விஞ்ஞாபனங்களை மிகத் தெளிவாகவும் தமிழ்த் தேசிய நலன், தமிழ்த் தேசிய நிலைப்பாடு, இனப் பிரச்சினைக்கான தீர்வு உள்ளிட்ட விடயப்பரப்புகளை உள்ளடக்கியதாக இருந்தாகவேண்டும். அதனைவிடவும் அபிவிருத்தியும் இவ்விஞ்ஞாபனங்களில் ஆதிக்கம் செலுத்தும்.

2009இல் முள்ளிவாய்க்காலில் மௌனித்துப்போன தமிழர்களின் ஆயுத விடுதலைப்போராட்டம் அதன் பின்னரான இன அழிப்புக்கெதிரான நடவடிக்கைகளைப் பெரும்பான்மை அரசாங்கத்தின் அணுகுமுறைகளில் உள்வாங்கப்பட்ட செயற்பாடுகளால் வீணாகியே போனது. அதற்குத் தமிழ்த் தேசிய நலன் மீதான அக்கறையின்மையின் குறைபாடேயாகும்.

தமிழர்களுடைய நீண்டகால இனப்பிரச்சினைக்கான தீர்வினை முன்னுரிமைக்குட்படுத்துனை விடுத்து எல்லோரும் பூசலையும் மெழுகலையும் செய்து தமிழர்களுக்கான அரசியல் தீர்வு எப்போது கிடைக்கும் என்பதே தெரியாமல் நகர்ந்து கொண்டிருப்பதில் எந்தப்பயனுமில்லை என்பதனை தமிழ்த் தேசியத்துக்கான அரசியலை மேற்கொண்டுவரும் அரசியல் கட்சிகளும் அதன் அரசியல்வாதிகளும் உணர்ந்து கொள்ளவேண்டும். தமிழ் மக்களுடைய இனப்பிரச்சினைக்கான தீர்வினைக் கண்டு கொள்வதற்காக ஆரம்பிக்கப்பட்ட போராட்டங்கள் வீணேயான நிலையில், மீண்டும் மீண்டும் போராட்டங்களையும் முயற்சிகளையும் மாத்திரம் ஒருமிப்பு, ஒற்றுமை இல்லாது மேற்கொள்வதில் பயனில்லை என்பதனை உணர்ந்து தமிழ் மக்களிற்கான அரசியலை மேற்கொள்வதற்கான ஒற்றுமைப்படுதலை இல்லாமலாக்கிக் கொண்டிருக்கின்ற நிலைமையினை மாற்றத்துக்குட்படுத்துதல் அவசியமாகின்றது.

அந்தவகையில், இம்முறை நடைபெறுகின்ற தேர்தலானது, தமிழ்த் தேசிய நலனின் மீது தமிழ்த் தேசியக் கட்சிகளையும், அரசியல்வாதிகளையும் வழிப்படுத்துவதாகவும், தமிழ்த் தேசிய நலனின் முக்கியத்துவத்தினையும் உணர்த்துவதாகவும் அமைந்திருத்தலே சிறப்பு. அது தாய்க் கட்சி, தந்தைக் கட்சி என்பதற்கப்பால் எதிர்காலத்திலும் தமிழ்த் தேசிய நலனை முதன்மைப்படுத்துவதாகவும் இருத்தல் வேண்டும்.

## கடிதங்கள்

### கவனம் செலுத்துங்கள்

மாத்தளையில் 1939ஆம் ஆண்டில் கட்டப்பட்ட பழைமிக்க கட்டிடம் ஒன்றில் இஸ்மாலியா வித்தியாலயம் எனும் பெயரில் பாடசாலை நீண்டகாலமாக இயங்கி வருகிறது.

சுமார் 250 மாணவர்கள் கல்வி கற்கும் இப்பாடசாலையின் முன் பக்கக் கட்டிடம் கீழிலிருந்து மேல் நோக்கி நீண்ட வெடிப்பு ஏற்பட்டுள்ளது.

இதுகுறித்து இப்பாடசாலை அதிபர் உட்பட அபிவிருத்திச் சங்கம், மாத்தளை அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையத்தின் கவனத்திற்குக் கொண்டு சென்று, நீண்ட நாட்களாகியும் இதுவரை எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என தெரிவிக்கப்படுகிறது.

இக்கட்டிட பகுதியில் மாணவர்கள் கல்வி கற்பதும், அப்பகுதியில் நடமாடுவதை தவிர்ப்பதற்காக கயிறு கட்டி சிவப்பு எச்சரிக்கை வைக்கப்பட்டிருப்பதுடன், இக்கட்டிடம் உடைந்து விழக்கூடிய நிலையில் இருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

- ஏ.எம்.ஜலீல்



# வேறு என்ன வேண்டும்



பெரியசாமிப்பிள்ளை
செல்வராஜ்
முன்னாள் ராஜதந்திரி

தமிழ்த் தேசியம் தமிழரிடையே பேசிய தமிழரசுக் கட்சியின் சமீபகால தலைமைகளின் (இருப்பவர் - உள்ளே, வெளியே, போட்டியில் ஈடுபட்டு வென்றவர், தோற்றவர்) நடவடிக்கைகள் பற்றி நாடறியும். இன்னும், கூட்டமைப்புத் தலைவர் சம்பந்தன் அவர்கள், தான் வகித்த எதிர்க்கட்சித் தலைவர் பதவி வலிதற்றதன் பின் எதிர்க்கட்சித் தலைவர்க்காக வழங்கப்பட்ட அரசின் உத்தியோகபூர்வ வீட்டை அரசிடம் மீளக் கையளித்திருக்க வேண்டும். அப்படி நடக்கவில்லை என இப்போதே தெரிந்து கொண்டோம்.

எதிர்க்கட்சித் தலைமை தமிழர் தலைவர்க்குக் கிடைத்தது அரசியலில் எதிர்பாராத ஒரு சந்தர்ப்பமாகும். ஆயின், எதிர்க்கட்சித் தலைவர்க்கான வீட்டைத் தவிர்த்திருக்க வேண்டும். தமிழ் மக்களிடம் தமிழரின் எதிர்கால தரிசனம் பற்றிப் பேசி, போர் அவலம், போர் விளைவு பற்றிப் பேசி, வாக்குப் பெற்று பாராளுமன்றம் சென்றவர்கள் பதவி வழி வரப்பிரசாதங்களை அல்ல அனுகூலங்களைத் தவிர்த்திருக்க வேண்டும். ஓர் எடுத்துக்காட்டாக இருந்திருக்க வேண்டும்.

ஆட்சியின் பங்குதாரராக நாம் இருக்க முடியாது. அதற்காக நாம் பாராளுமன்றம் வரவில்லை என தமது நிலைப்பாட்டை வலியுறுத்தக் கூறிய நியாயங்கள் ஏராளமானவையாகும். அரசு தரும் சலுகைகளை வேண்டாமென ஏன் மறுக்கவில்லை? ஏன் இந்த நியாயங்கள் அப்போது கூறப்படவில்லை? அதுவும் நாம் ஆட்சியில் பங்களிப்பு செலுத்த முடியாது. அமைச்சர் பதவிகளை ஏற்றுக்கொள்ள முடியாது என இன்னும் பல முடியாதனவற்றை பொதுவெளியில் வரிசைப்படுத்திக் கூறியவர்கள், அரசின் சலுகைகளையும் மறுத்திருக்க வேண்டும். அதனையும் பொதுவெளியில் வெளிப்படுத்தியிருக்க வேண்டும்.

ஒரே கட்சியின் உறுப்பினர்களுக்கு இடையேயான கருத்து வேறுபாடுகளை இணக்கமாகக் களைந்து, ஒற்றுமையை பேண முடியாதுள்ளது. இந்நிலையில், தமிழ் மக்கள் உரிமை பற்றி அரசிடமும் வெளிநாட்டுப் பிரதிநிகளிடமும் பேசுவது எப்படி?

தமிழரசுக் கட்சியின் நிர்வாகசபை உறுப்பினர் தேர்தல் நடைமுறையினால் ஏற்பட்ட பிரச்சினைகளைத் தமிழ் மக்களின் பிரதிநிதிகளான எங்களால் தீர்த்துக் கொள்ள முடியவில்லை. ஆதலால் பிரச்சினைக்கான தீர்வை பெறுவதற்கு நீதிமன்றம் செல்கிறோம்.

இது இவ்வாறு இருக்க, பேச்சாளர் சுமந்திரன் அவர்கள் கடந்த அரசினால் வழங்கப்பட்ட 'பார் லைசன்ஸ்' பெற்றவர் பட்டியலை வெளியிடும் படி உரத்துக் கூறுவதன் மூலம் அவர் தமிழ் மக்களுக்கு ஒரு செய்தியைத் தெரிவிக்க விரும்புகிறார் என்பதை நாம் புரிந்து கொள்ள முடிகிறது. தமிழர் தலைமைகளது தடுமாற்றங்கள் எவற்றைக் குறித்து நிற்கின்றன?

பெருந்தலைவர், தந்தை செல்வா அவர்களால் உருவாக்கப்பட்ட அரசியற் கட்சி: தலைவர்கள் அமிர்தலிங்கம், சிவசிதம்பரம் என விரிந்து இன்று இந்நிலையை அடைந்துள்ளது.

தமிழர்கள், தமது சமூக உட்கட்டுமானங்களை இழந்து நிற்கின்றனர். தமிழர் தலைவர்கள், பல கட்சிக் கட்டுமானங்களைக் கட்டியெழுப்புகின்றனர். சனநாயக அரசியல், எண்ணிக்கையில் தங்கியுள்ளது. இதனை அரசியல் தலைவர்கள் நன்கறிவர். அதனாலேயே கட்சி, கருத்து, தத்துவம், குறிக்கோள்கள், செயற்பாடுகள் என ஓரணி - கூட்டணியாகத் திரள முடிகிறது. அதுவும் தேர்தல் தருணங்களில்: அல்லது வசதியாக வேறுபட்டு நிற்க முடிகிறது.

தமிழ் மக்கள் தமது பிரதேசங்களில் பாதுகாப்பாகவும் நிம்மதியாகவும் வாழ வேண்டும். அன்றாட வாழ்க்கையை வெற்றிகரமாகக் கொண்டு நடாத்த வேண்டும். சீரழிந்த சமூகக் கட்டுமானங்கள் மீள் கட்டியெழுப்பப்படல் வேண்டும்.

இதற்குப் பாராளுமன்றத்தில் தமிழ் மக்களின் உடனடித் தேவை பற்றி ஒத்துக் கருத்துடைய உறுப்பினர் எண்ணிக்கை அவசியம் ஆகும். இவற்றைக் கொண்டு நடத்த பாராளுமன்ற தமிழ்ப் பிரதிநிதிகளின் முனைப்பும் அர்ப்பணிப்பும் ஏகோபித்த ஆதரவும் வேண்டும். தமிழர் தலை நிமிர்ந்து தன்மானத்துடன் வாழ வேண்டும். இப்போது வேறு என்ன வேண்டும்?

## 100 நிறுவனங்களில்

# கொமர்ஷல் வங்கிக்கு 2ஆவது இடம்

கொமர்ஷல் வங்கி 2023-24ஆம் ஆண்டிற்கான 'LMD 100' பட்டியலில் இரண்டாவது இடத்தைப் பெற்றுள்ளது, LMD சஞ்சிகையினால் கௌரவத்துக்குரிய பெரு நிறுவனங்களை தரவரிசைப்படுத்தும் பட்டியலில் இம்முறை கொமர்ஷல் வங்கி, ஐந்து இடங்கள் முன்னேறி 'இரண்டாவது இடத்தைப் பிடித்துள்ளது.

இந்த சமீபத்திய LMD தரவரிசையின் மூலம் கொமர்ஷல் வங்கி, LMD 100இல் உயர்ந்த தரவரிசையில் உள்ள வங்கி என்ற அந்தஸ்தைத் தக்கவைத்துக் கொண்டது மட்டுமல்லாமல், LMDஇன் முதன்மை தரவரிசையை அடிப்படையாகக் கொண்ட வருமானத்தின் அடிப்படையில், நாட்டின் மிகப் பாரிய பல்வகைப்பட்ட வர்த்தக குழுமங்களை முந்தியுள்ளது.

**வருமானத்தின் அடிப்படையில், நாட்டின் மிகப் பாரிய பல்வகைப்பட்ட வர்த்தக குழுமங்களை முந்தியுள்ளது**




31 வருடங்களுக்கு முன்னர் முதன்முதலில் வெளியிடப்பட்டதிலிருந்து ஒவ்வொரு வருடமும் LMD தரவரிசையில் முதல் 10 இடங்களுக்குள் இருந்த பெருமையும் கொமர்ஷல் வங்கிக்கு உண்டு.

"LMD தரவரிசையில் இரண்டாவது இடத்தைப் பெற்றதில் வங்கி உண்மையிலேயே மகிழ்ச்சி அடைகிறது, இது கடந்த நிதியாண்டில் எங்களது வலுவான செயல்திறனுக்கான சான்றாகும்" என்று கொமர்ஷல் வங்கியின் முகாமைத்துவப் பணிப்பாளரும் பிரதம நிறைவேற்று அதிகாரியுமான சனத் மனதுங்க தெரிவித்தார். 'இது வங்கியின் உள்ளார்ந்த நிதியியல் வலிமை, ஆழமாக வேரூன்றிய நிலை மற்றும் சுறுசுறுப்பு ஆகியவற்றின் தெளிவான நிரூபணமாகும். இந்த தரவரிசையானது, கொமர்ஷல் வங்கி குழுமத்தின் நெருக்கடியான சூழ்நிலையில் வளர்ச்சியை அடைவதற்கான அர்ப்பணிப்புக்கும் வழங்கப்பட்ட ஒரு கௌரவமாகும்.

இலங்கையின் முன்னணி பட்டியலிடப்பட்ட நிறுவனங்களின் விற்பனைப்புரள்வு அடிப்படையிலான முதன்மை தரவரிசைக்கு மேலதிகமாக, LMD நிறுவனங்களை துறை மற்றும் மொத்த சொத்துக்கள், வரிக்குப் பிந்தைய இலாபம், பங்குதாரர்களின் நிதிகள், சந்தை மூலதனமாக்கல் மற்றும் பிற செயல்திறன் குறிகாட்டிகள் ஆகியவற்றின் அடிப்படையில் தரவரிசைப்படுத்துகிறது. LMD 100 தரவரிசையானது நாட்டின் பல முன்னணி கூட்டு நிறுவனங்கள், தொலைத்தொடர்பு நிறுவனங்கள், சில்லறை வணிக நிறுவனங்கள், காப்பீட்டாளர்கள் மற்றும் பிற துறைத் தலைவர்கள் மற்றும் பட்டியலிடப்பட்ட வங்கிகளை உள்ளடக்கியது.

## ஜோன் கீல்ஸ் Cinnamon Life at City of Dreams Sri Lanka

# சொகுசு ஹோட்டல்

ஜோன் கீல்ஸ் நிறுவனத்தினால் 1.2 பில்லியன் டொலர்களுக்கும் அதிகமான முதலீட்டில் கட்டப்பட்ட Cinnamon Life at City of Dreams Sri Lanka சொகுசு ஹோட்டல், செவ்வாய்க்கிழமை (15) திறக்கப்படவுள்ளது.

இலங்கையில் தனியார்த் துறையின் மிகப்பெரியதும், நம்பிக்கைக்குரிய முதலீடாகவும் குறிப்பிடப்படக்கூடிய இந்த ஹோட்டல், வர்த்தகம், ஓய்வு மற்றும் பொழுதுபோக்கிற்காக தெற்காசியாவில் மிகவும் செல்வாக்கு மிக்க சுற்றுலாத் தலமாக நாட்டின் சுற்றுலாத் துறைக்கு புதிய திருப்புமுனையாக அமையும்.

687 ஆடம்பர அறைகளைக் கொண்ட Cinnamon Life at City of Dreams Sri Lanka சொகுசு ஹோட்டலில்,போல்ரூம்கள், high-tech நிகழ்வுகள் மற்றும் மாநாட்டு நிகழ்வுகள் போன்ற தனித்துவமான வசதிகளுடன், ஒரே நேரத்தில் வெவ்வேறு தளங்களில் 5,000 க்கும் மேற்பட்ட விருந்தினர்களை உள்ளடக்கவும் அவர்களுக்கான சேவைகளை பெற்றுக்கொள்ளவும் முடியும் என்பது சிறப்பம்சமாகும்.


சர்வதேச மாநாடுகள் மற்றும் நவீன வசதிகளுடன் கூடிய பெரிய அளவிலான நிகழ்வுகளை கொழும்பில் மிகப்பெரிய நிகழ்வு அரங்காக ஏற்பாடு செய்யும் வசதியை வழங்குவதால், உலகளாவிய MICE சுற்றுப்பயணங்களுக்கான முன்னணி இடமாக இருக்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

ஹோட்டலுக்கு வரும் விருந்தினர்கள் அனைவருக்கும் சுவையான உணவு மற்றும் பானங்களை வழங்குவதற்காக 250 சமையல் கலை நிபுணர்களுடன் 1,500க்கும் மேற்பட்ட சேவை நிபுணர்களைக் கொண்ட குழு அர்ப்பணிப்புடன் செயற்படும்.

இங்கே, சுற்றுலாப் பயணிகளுக்கு எந்தவொரு உள்ளூர் மற்றும் வெளிநாட்டு உணவு வகைகளின் சுவையான அனுபவத்தைப் பெறுவதற்கான வாய்ப்பும் உள்ளதுடன், வாடிக்கையாளர்களுக்கு மேலும் பல ரக ஆகார அனுபவங்களை வழங்குவதற்கு எதிர்வரும் மாதங்களில் பல புதிய உணவகங்களின் வருகையுடன் அனைவருக்குமான அனுபவத்தை மேம்படுத்தவுள்ளதாக அறிவித்துள்ளது.

மேலும், ஹோட்டல் வளாகத்தில் அமைந்துள்ள பார்ப்பவர்களை வசீகருக்கும் அழகுடன் நிர்மாணிக்கப்பட்டிருக்கும் இடங்களில் திருமண நிகழ்வுகள் மற்றும் பிற சிறப்பு நிகழ்வுககளை ஒழுங்கமைக்க வாய்ப்பினை தருவதால் இது கொழும்பில் அனைவருக்குமான சிறந்த புகலிடமாக இருக்கும்.

15ஆம் திகதி திறக்கவிருக்கும் Cinnamon Life at City of Dreams Sri Lankaவின் ஒரு மாபெரும் நிர்மாணத்திற்கான இறுதிக் கட்ட பணியாக, ஷொப்பிங் மற்றும் கேமிங் வசதிகளைக் கொண்ட பொழுதுபோக்கு வளாகம் மட்டுமன்றி 113 அறைகளைக் கொண்ட அதி சொகுசு 'Nuwa' ஹோட்டல் வசதியை 2025ஆம் ஆண்டின் நடுப்பகுதியில் திறக்கவும் ஜோன் கீல்ஸ் நிறுவனம் நடவடிக்கை எடுத்துள்ளது.




இது தொடர்பில் கருத்து தெரிவித்த ஜோன் கீல்ஸ் குழுமத்தின் தலைவர் கிருஷான் பாலேந்திரா, "ஜோன் கீல்ஸைப் போன்று இலங்கையிலும் இத்திட்டம் பாரிய மாற்றத்தை ஏற்படுத்தும்" என தெரிவித்தார்.

அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில், &quot- 'City of Dreams Sri Lanka' ஒரு தசாப்தத்திற்கு முன்னர் உருவாக்கப்பட்ட ஒரு அற்புதமான திட்டமாக சுட்டிக்காட்ட முடியும். ஷாப்பிங் மற்றும் பொழுதுபோக்கு வாய்ப்புகள் போன்ற வசதிகள் மற்றும் உயர்ந்த வாழ்க்கைத் தரம் போன்ற வசதிகள் மூலம் இந்த வசதி கொழும்பில் ஓய்வு மற்றும் பொழுதுபோக்கிற்கான மிகவும் கவர்ச்சிகரமான இடமாக மாற்றும் என்பது எனது நம்பிக்கை.

தெற்காசியாவில் மேம்படுத்தும் திட்டமாக, இலங்கையில் சுற்றுலாத் தேவை, அந்நிய செலாவணி வருவாய் மற்றும் வேலை வாய்ப்பு உருவாக்கம் ஆகியவற்றுக்கு இது பெரும் ஆதரவாக இருக்கும் என்று நம்புகிறோம். இத்திட்டம் முழுமையாக நிறைவடைந்தவுடன், 20,000க்கும் மேற்பட்ட நேரடி மற்றும் மறைமுக வேலை வாய்ப்புகள் மூலம் இலங்கை சமூகத்துடன் இணைந்து பணியாற்றும் வாய்ப்பு ஏற்படும்.

இலங்கையை பிராந்திய மற்றும் உலகளாவிய சுற்றுலா சந்தையில் முன்னணிக்கு கொண்டு வருவதற்கான குழுவின் பரந்த மூலோபாயத்தின் படிகளில் ஒன்றாகவும் இதைக் குறிப்பிடலாம்.

இவ்வகையான பெரிய அளவிலான திட்டங்களுக்கு தலைமை தாங்குவது, நிலையான வளர்ச்சியை அடைவதற்கான ஜோன் கீல்ஸ் குழுமத்தின் பெரும் அர்ப்பணிப்பை தெளிவாக வலியுறுத்துகிறது" என தெரிவித்தார்.

# விடுதலையை விரும்பாத கைதி (மதிலுகள்)



ச.தனுஷ்கா,
ஊடகக் கற்கைகள் துறை,
யாழ்.பல்கலைக்கழகம்

திரைப்படங்கள் பல இரசனையைத் தூண்டுகின்றன.எனினும் அனைத்து திரைப்படங்களும் பார்வையாளர்களது மனதில் இடம்பிடிப்பதில்லை. பார்வையாளர் மனதில் தாக்கத்தை ஏற்படுத்துமாயின் குறித்த திரைப்படமானது சிறந்த திரைப்படம் எனலாம். அந்த வகையில், இயக்குநர் அடூர் கோபாலகிருஷ்ணனின் இயக்கத்தில் 1990ஆம் ஆண்டு மே மாதம் வெளியான மதிலுகள் என்னும் மலையாள மொழியில் அமைந்த திரைப்படமும் சிறந்த திரைப்படம் என்னும் வரிசையில் இடம் பிடித்துள்ளது எனலாம். இத்திரைப்படமானது வைக்கம் முஹமது பஷீரின் சுயசரிதை நாவலை அடிப்படையாகக் கொண்டதாகும்.

திரைக்கதையானது ஒரு எழுத்தாளர் பிரித்தானிய அரசாங்கத்திற்கு எதிராக எழுதிய குற்றத்திற்காக இராஜ துரோகச் செயல் என்னும் அடிப்படையில் இரண்டு அரை வருடச் சிறைத் தண்டனைக்காகச் சிறைச்சாலை சென்ற போது அங்குள்ளவர்களுடன் நல்ல உறவு நிலையைப் பேணுகிறார். கைதிகளுடனும் அங்குள்ள சிறைச்சாலை அதிகாரிகளுடனும் குறித்த எழுத்தாளர் சிறந்த நட்புறவுடன் பழகுகிறார். ஏனைய கைதிகளை விடவும் நாயகன் எழுத்தாளர் என்னும் அடையாளத்தைத் தாங்கி நிற்பதால் சிறைச்சாலையிலும் இவருக்கு மரியாதை உண்டு. எதிர்பாராதவிதமாக ஒரு பெண் கைதி மீது காதல் வயப்படுகிறார் எழுத்தாளர். இவரது காதல் முழுமை அடைகிறதா? இவர் விடுதலை செய்யப்பட்ட பின்னர் தன் காதலியைச் சந்தித்தாரா? என்பதனையே கதையோட்டமாகக் கொண்டுள்ளது மதிலுகள் திரைப்படம்.

திரைக்கதையின் கதாநாயகனாக வைக்கம் முகமது பஷீர், எதிரியாகச் சூழல் காணப்படுகிறது. துணை நடிகர்களாக ரசாத் (பஷீரின் சிறு வயது நண்பர்), அணியன் (ஜெயிலர்) சிறைக் காவலாளி, கைதிகள், நாராயணி (பஷீரின் காதலி)போன்ற கதாபாத்திரங்கள் காணப்படுகின்றன. நாராயணி என்னும் கதாபாத்திரம் கதையில் காட்சியாக வெளிப்படாது. வெறுமனே ஒரு பெண்ணின் குரல் வழியிலான உரையாடலாகத் திரைக்கதை முழுதும் வெளிப்படும். கதைக் களங்களாக நீதிமன்றம், சிறைச்சாலை, சிறைச்சாலையில் உள்ள பஷீரின் அறை, தோட்டம், ஆண் மற்றும் பெண் சிறைக் கைதிகளைத் தனித்துப் பிரித்து வைக்கும் மதில் இருக்கும் சுற்றுப்புறச் சூழல் போன்றன காணப்படுகின்றன.

இயக்குநர் அடூர் கோபாலகிருஷ்ணன் சிறையில் மலரும் காதலை மிக எளிதாகவும் யதார்த்தமாகவும் கையாண்டுள்ளார். நாராயணி பஷீரின் உரையாடலின் போதும் மதிலைத் தாண்டி இருவரும் பரிசுப் பொருட்களான தேநீர் தூள் மற்றும் ரோஜாச் செடியை எறிந்து பரிமாறுதல் போன்ற காட்சிகளில் மிகைப்படுத்தலற்ற காதல் உணர்வை வெளிப்படுத்தியுள்ளார்.

PLOT ஒன்று-அரசியல் கைதிகளை விடுவிக்கும் பெயர் பட்டியலில் பஷீரின் பெயர் இடம்பெறாமை,PLOT இரண்டு- நாராயணி மீது காதல் வயப்படல்,PLOT மூன்று-எதிர்பாராத விதமாகச் சிறையிலிருந்து முகமது பஷீர் விடுதலை செய்யப்படல் போன்றன அமைகின்றன.-CODE

கெமரா கையாள்கையானது அதிகமான சந்தர்ப்பங்களில் Medium shot, Full shot, Extreme Close up shot, Wide angle shot போன்றன பயன்படுத்தப்பட்டுள்ளன. ஒளியமைப்பானது இயற்கை ஒளியமைப்பு மற்றும் ஒளிச் செறிவு அதிகமான ஒளியமைப்பு (Hard lighting)போன்றன பயன்படுத்தப்பட்டுள்ளன. உதாரணமாகக் கைதிகளின் அறையைக் காண்பிக்கும் காட்சிகளில் ஒளிச் செறிவு அதிகமாகப் பயன்படுத்தப்பட்டுள்ளது.

மதிலுகள் திரைப்படம் வென்ற விருதுகள்,குறித்த திரைப்படத்தின் தரத்தை உறுதிப்படுத்துவதாக உள்ளது. அவ்வகையில் குறித்த திரைப்படம் வென்ற விருதுகளாவன, 1990ஆம் ஆண்டு இத்தாலியில் நடைபெற்ற வெனிஸ் திரைப்பட விழாவில் FIPRESCI மற்றும்








UNICEF விருதுகளைப் பெற்றது. 1990ஆம் ஆண்டு இந்தியாவில் இடம்பெற்ற தேசிய திரைப்பட விழாவில் பல விருதுகளைப் பெற்றது.


தங்கத் தாமரை விருது- சிறந்த இயக்குநர்- அடூர் கோபாலகிருஷ்ணன், வெண்தாமரை விருது - சிறந்த நடிகர் - மம்முட்டி, வெண்தாமரை விருது - சிறந்த ஒலிப்பதிவு,வெண்தாமரை விருது - சிறந்த வட்டாரத் திரைப்படம்,போன்ற விருதுகளை வென்றது. இயக்குநர் அடூர் கோபாலகிருஷ்ணனுக்கு பெருமை தேடித்தந்த திரைப்படங்களின் வரிசையில் மதிலுகள் திரைப்படமும் உள்ளடங்குகிறது

பிற திரைப்படங்கள் போல் சிறைக் கைதிகளின் வாழ்க்கை நடைமுறைகளைக் கொடூரமானதாக, அவலங்கள் நிரம்பப் பெற்றதாக, வன்முறைகளுடன் சித்தரிக்காது: சற்று மாறுபட்ட சிந்தனா நோக்கத்தில் யதார்த்தம் குறையாத பாணியில் இயல்பான வாழ்வியல் அம்சங்களை இயக்குநர் பார்வையாளர்களுக்குக் காண்பித்துள்ளார்.உதாரணமாக சக கைதிகளுடன் நட்பு உறவு நிலை,காவலாளிகளுடனான நல் மரியாதை, சிறைக் கைதிகளின் அன்றாட செயற்பாடுகள், அவர்களுக்கு வழங்கப்படும் தொழில் வாய்ப்புகள் சார்ந்த பயிற்சிகள் உதாரணமாக உணவு தயாரிப்பு, தோட்ட நடவடிக்கைகள். விடுதலைக்காக ஏங்கும் கைதிகளின் மனப் போராட்டங்கள் போன்ற சிறைக் கைதிகளினுடைய பல்பரிமாண நோக்கு நிலைகளில் திரைப்படம் அமைந்துள்ளது.

இதனால் வரையிலும் தனது விடுதலைக்காக ஏங்கிக் கொண்டிருந்த நாயகன், தன் விடுதலை செய்தியை அறிந்தும் முதன்முறையாக மனமுடைந்து கண்ணீர் சிந்துகிறான். விடுதலையை எண்ணி மகிழ்ச்சி அடையாமல் விடுதலை ஏன் கிடைத்தது என்று துக்கமடைகிறான். முகம் பாராத தன் காதலியைச் சந்திக்காமலேயே அவளை விட்டுப் பிரிவதை எண்ணி தனக்குக் கிடைத்த விடுதலையை வெறுக்கும் கைதியாக நிலைகுலைந்து நிற்கின்றான். சிறையில் உதித்த இக்காதல் சிறையிலேயே நிறைவடையுமா? அல்லது நாயகன் விடுதலைக்குப் பின்னரும் தன் காதலி நாராயணியைச் சந்திப்பானா போன்ற கேள்விகளும் உள்ளத் தவிப்புகளும் நீங்காமலேயே இத்திரைப்படம் திறந்த முடிவாக நிறைவடைகிறது.

# யாழ். பல்கலைக்கழக பொன்விழா

சயனிகா ஸ்ரீகாந்த்




யாழ்ப்பாண பல்கலைக்கழகப் பொன்விழா நிகழ்வுகளின் ஓர் அங்கமாக யாழ்ப்பாண பல்கலைக்கழக ஊடக கற்கைகள் துறையின் ஏற்பாட்டில் கனலி மாணவர் சஞ்சிகையின் ஐந்தாவது இதழ் வெள்ளிக்கிழமை நான்காம் திகதி யாழ்ப்பாண பல்கலைக்கழக நூலக கேட்போர் கூடத்தில் காலை 9 மணியளவில் இடம் பெற்றது.

ஊடக கற்கைகள் துறைத் தலைவர் பூங்குழலி சிறிசங்கீர்த்தனன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில், பிரதம விருந்தினராக யாழ்ப்பாண பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் சி.சிறிசற்குணராசா, சிறப்பு விருந்தினராக யாழ். பல்கலைக்கழக கலைப்பீடாதிபதி பேராசிரியர் சி ரகுராம் ஆகியோர் கலந்து சிறப்பித்துள்ளனர்.

யாழ். பல்கலைக்கழக பொன்விழா நிகழ்வின் ஓர் அங்கமாக இடம்பெற்ற இச்சஞ்சிகை வெளியீட்டில், மாணவர்களுக்கான வாழ்த்துறையினை ஊடக கற்கைகள் துறை விரிவுரையாளர் அனுதர்ஷினி கபிலனும், சஞ்சிகைக்கான கருத்துரைகளை தமிழ்த்துறை விரிவுரையாளர் த.அஜித் குமார், சிரேஷ்ட ஊடகவியலாளர் பாரதி இராஜநாயகம் ஆகியோரும் வழங்கியுள்ளனர்.

ஊடகக் கற்கைகள் துறை மாணவர்களின் 'பல்கலையன்', 'பதிவு', 'அடையாளம்', 'விசைச்சிறகுகள்', ' மைத்தூறல்', 'கனலி 2018', 'கனலி 2019' மற்றும் 'கனலி 2021 - 2022', வரிசையில் 'கனலி 2023' கால் பதித்திருக்கின்றது.

'இணரூழ்த்தும் நாறா மலரனையார்
கற்றது உணர விரித்துரையா தார்'

எனும் திருக்குறளுக்கமைய கற்ற விடையங்களைப் பிறருக்குக் கொண்டு சேர்க்கும் நோக்கில் அனைவரும் விரும்பும் வகையில் சமூகத்தில் உள்ள பல விடயங்களை பல்வேறு வடிவங்களை உள்ளடக்கியதாக ஆண்டுதோறும் கனலி பிரசவிக்கின்றது. அந்த வகையில், வெகுஜன ஊடகத்துறை இலத்துரனியல் ஊடகங்களின் பால் அதிக கவனயீர்ப்பை தக்க வைத்திருப்பதாலும், புயலென எழுந்துள்ள புதிய ஊடகங்களின் பிரவேசத்தாலும் அச்சு ஊடகங்கள்




செல்வாக்கு இழந்து விட்டனவோ என்ற ஆதங்கம் ஊடகத்துறையை ஆக்கிரமித்துள்ள இக்கால பகுதியில், அந்தக் கவலைகளை தகர்த்தெறிய முகமாக தரமிக்க படைப்பாக்கங்களை ஊடக கற்கைகள் மாணவர்கள் தந்திருக்கின்றனர்.













# குறுந்திரைப்பட விழா 2024




**சுப்பிரமணியன் ஜனுர்ஷா,**
**ஊடகக் கற்கைகள் துறை,**
**யாழ். பல்கலைக்கழகம்.**


யாழ்ப்பாணப் பல்கலைக்கழக ஊடகக் கற்கைகள் துறையானது மாணவர்களை பாட ரீதியாக மட்டுமன்றி, அவற்றினை செயற்படுத்தும் செய்முறை பயிற்சியாக பல்வேறான செயற்றிட்டங்களை மேற்கொண்டு வருகின்றது.

அந்தவகையில், மாணவர்கள் ஒவ்வொரு வருட கால கற்கைகளின் அடிப்படையில், சஞ்சிகை வெளியீடுகள், ஆவணப்படங்கள் திரையிடல் வரிசையில் குறுந் திரைப்படங்கள் என்பவற்றை கற்றலின் பெறுதியாக வெளியிடுகின்றனர். அந்தவகையில், யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தின் பொன் விழா கொண்டாட்டத்தின் ஓர் அங்கமாக யாழ்ப்பாணப் பல்கலைக்கழக ஊடகக் கற்கைகள் துறை மாணவர்களால் தயாரிக்கப்பட்ட குறுந்திரைப்படங்கள் வெள்ளிக்கிழமை(11) ஒக்டோபர் பிற்பகல் 2 மணிக்கு யாழ். பல்கலைக்கழகத்தின் கைலாசபதி கலையரங்கத்தில் திரையிடப்பட்டன.

குறுந்திரைப்பட விழாவில் மாணவர்களின் குறுந்திரைப்படங்களுக்கான பெறுபேறுகளின் அடிப்படையில், தெரிவு செய்யப்பட்ட பத்து குறுந் திரைப்படங்கள் திரையிடப்பட்டன.

இந்நிகழ்வானது ஊடகக் கற்கைகள் துறைத் தலைவர் பூங்குழலி சிறிசங்கீர்த்தனன் அவர்களது தலைமையில் இடம்பெற்றதுடன் நிகழ்ச்சியில் பிரதம விருந்தினராக யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் சி. சிறிசற்குணராசா, சிறப்பு விருந்தினராக கலைப்பீடாதிபதி பேராசிரியர் சி.ரகுராம், துறைத் தலைவர்கள், விரிவுரையாளர்கள், திரைப்பட ஆர்வலர்கள் மற்றும் மாணவர்கள் ஆகியோர் கலந்து சிறப்பித்தனர்.

இக்குறுந்திரைப்பட விழாவானது ஊடகக்கற்கைகள் துறை மாணவர்களின் எண்மியக்கதை சொல்லல் கற்றலின் பெறுதியாக அமைவதுடன், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் பொன்விழா நிகழ்வுகளின் ஓர் அங்கமாக இடம்பெற்றது. ஆதித்தா, ஆசனம், மீண்டும் கருவறைக்குள், காட்சிப் பிழை, அலை, freeze, ஏக்கம், மெய்ம்மை, மெய்ப்பட, வேட்கை ஆகிய பத்து குறுந்திரைப்படங்கள் திரையிடப்பட்டன.

நிகழ்வில் மாணவர்களது இயக்கத்தில் வெளிவந்த குறுந் திரைப்படங்களுக்கான அங்கீகாரமானது கூடியிருந்த அவையோரின் கைத்தட்டல் ஒலிகளினூடாக கிடைக்கப்பெற்றதே படைப்பாளிகளின் வெற்றி என்றுதான் கூறவேண்டும். பெரும்பாலான மாணவர்களது முதல் முயற்சியே திரையில் விருந்தளித்த குறுந் திரைப்படங்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

'ஆதித்தா' என்ற குறுந் திரைப்படமானது போரின் வடுக்களால் பாதிக்கப்பட்ட ஒரு நபர் தன் குடும்பத்தை இழந்து அவர்களது நினைவோடு வாழ்கின்ற வலி, ரணம் மிக யதார்த்தமாகக் கூறப்பட்டது. 'ஆசனம்' என்ற குறுந் திரைப்படமானது மலையக சமூகத்தில் காணப்படுகின்ற பேசாப் பொருட்களில் ஒன்றான மக்களுக்கான கழிவறை இன்மை பிரச்சினையினை ஒரு குடும்பத்தை மையப்படுத்தி ஒரு சமூகத்தின் பிரச்சினையை வெளிப்படுத்தி உள்ளது.

இன்றைக்கு அரசியல்வாதிகள் தேவையற்ற வீண் செலவுகளுக்காகவும் கொண்டாட்டங்களுக்காகவும் பணத்தை வீண் விரயமாக்குகின்ற சூழலில் இந்த மக்களது பிரச்சினையைக் கவனத்தில் கொள்ள வேண்டும் என்ற விடயத்தை வெளிப்படையாகச் சுட்டிக்காட்டி இயக்கப்பட்டுள்ளது ஆசனம்.

படைப்பாளியின் தைரியம் மற்றும் சமூகப் பொறுப்பு ஆசனம் குறுந் திரைப்படத்தின் ஊடாக வெளிப்படுத்தப்படுகின்றது என்பது குறிப்பிடத்தக்கது.

'மீண்டும் கருவறைக்குள்' என்ற குறுந் திரைப்படமானது, எந்தவித பிரச்சினையும் இல்லாமல் நிம்மதியாக இருக்கக்கூடிய தாயின் கருவறையில் இருக்கின்ற குழந்தையைக் கூட கடந்த போர் சூழல் விட்டு வைக்கவில்லை.


குண்டு வெடிப்புச் சத்தங்களின் அச்சுறுத்தல் அவர்களையும் பாதிக்கின்றது என்பதனை கற்பனை திறத்துடன் வெளிப்படுத்தி இருந்தது இந்த குறுந் திரைப்படம். போர் சூழல் வேண்டாம் எனக்குக் கருவறை போதும் என்ற கருத்தினை பதிவு செய்வதாக இந்த குறுந் திரைப்படம் அமையப்பெற்றிருந்தது.

'காட்சிப்பிழை' என்ற ஆவணப்படமானது நம் ஒவ்வொருவரது பார்வைக் கோணமும் அவரவரது அறிவுப் புலம் மற்றும் என்ன பாங்குகளின் அடிப்படையில் வேறுபடுகின்றது.

அந்த வித்தியாசங்களின் ஊடாக ஒவ்வொருவரும் வெவ்வேறாக விடயங்களை அர்த்தப்படுத்திக் கொள்கின்றனர். இதனை வெளிப்படுத்துவதாக காட்சிப்பிழை என்ற குறுந்திரைப்படம் அமைந்துள்ளது.

'அலை' என்ற குறுந் திரைப்படம் கடற்றொழில் மேற்கொள்ளும் கணவன் மனைவி இருவரது



பிரிவை எடுத்துக்காட்டும் பதிவாக அமைந்துள்ளது. கடற்றொழிலுக்குச் செல்லும் கணவர் மீண்டு வராது மரணித்த சம்பவத்தினை வெளிப்படுத்துவதாகவும் அந்த கணவனை இழப்பை ஏற்க முடியாமல் அதே கடற்றொழிலை மேற்கொள்ளும் ஒரு பெண்ணின் கதையை வெளிப்படுத்துவதாக இந்த குறுந்திரைப்படம் அமைந்துள்ளது.

'ப்ரீஸ்' (freeze) என்ற குறுந் திரைப்படமானது புகைப்படவியாலாளர் ஒருவர் தான் இலக்கு நோக்கிப் பயணிக்கையில் எந்தவித கவலைகளும் இன்றி இயற்கையுடன் மனிதர்களுடனும் தனி உலகில் வாழ்ந்து கொண்டிருக்கின்ற சந்தர்ப்பத்தில் குறித்த புகைப்படவியலாளர் விடுகின்ற தவறு அவரை வாழ்நாளில் எந்த அளவுக்கு முடக்குகின்றது என்பதனை வெளிப்படுத்தும் வகையில் ஒரு புகைப்படவியலாளரை மையப்படுத்தி freeze என்ற குறுந்திரைப்படம் அமைந்துள்ளது.

'ஏக்கம்' என்ற குறுந் திரைப்படமானது கணவன் மனைவிக்கு இடையில் இடம்பெறுகின்ற வாக்குவாதங்கள், முரண்பாடுகளின் வெளிப்பாடு குழந்தைகளை எந்த அளவுக்குத் தனிமைப்படுத்துகின்றது.


அவர்கள் எந்த அளவுக்கு மன உளைச்சலுக்கு ஆளாகுகின்றார்கள் என்பதனை வெளிப்படுத்தும் சமூக பொறுப்புணர்வு மிக்க குறுந் திரைப்படமாக இயக்கப்பட்டுள்ளது.

'மெய்ம்மை' குறுந் திரைப்படமானது பாட்டிக்கும் பேரனுக்கும் இடையிலான அந்த பாசப் பிணைப்பை வெளிப்படுத்தும் குறுந்திரைப்படமாக அமைந்துள்ளது.

'மெய்ப்பட' என்ற குறுந் திரைப்படமானது குடும்ப மட்டத்தில் பெண்கள் தங்களது ஆசைகளை எவ்வாறு திருமணத்திற்குப் பின் முடக்கிக் கொள்கின்றார்கள். குடும்பத்தைச் சுமக்கும் குடும்பப்பெண் ஒருவரின் நிராசைக் கனவுகள் பற்றிப் பேசும் 'மெய்ப்பட' அவர்களது வேலைச்சுமை, குழந்தை பராமரிப்பு எவ்வளவு தூரம் அவர்களைச் சிந்திக்க வைக்கிறது என்பதனை வெளிப்படுத்தும் முகமாகப் பதிவு செய்யப்பட்டுள்ளது.

'வேட்கை' என்ற குறுந் திரைப்படமானது நாம் ஒரு இலக்கு நோக்கிப் பயணிக்கையில் நேரமும் திட்டமும் முகாமைத்துவப்படுத்தப்படாத சந்தர்ப்பத்தில் எவ்வாறு நமது இலக்கை பாதிக்கச் செய்கின்றது என்பதனை வெளிப்படுத்தும் வகையில் நேரம் மற்றும் திட்டமிடல் அவசியமென்ற பதிவினை வெளிப்படுத்தும் வகையில் இந்த குறுந்திரைப்படம் அமைந்துள்ளது.

இவ்வாறாக, மாணவர்களின் கற்றலில் மாத்திரமன்றி, அவற்றினை செயற்படுத்தும் முயற்சிகளில் மாணவர்களை ஊக்கப்படுத்துகின்ற ஊடக கற்கைகள் துறையின் இந்த கற்றல் பெறுதிகளானவை மாணவர்களை எதிர்காலத்தில் துறை சார்ந்து பயணிப்பதற்கும் சமூகப் பிரச்சினைகளைப் பேசும் படைப்பாளிகளாக உருவாகுவதற்கும் சிறந்த வழிகாட்டியாக அமையப்பெறும் என்பதில் ஐயமில்லை.



# இடிபாடுகளும் இரசனையானவையே!


**பாலசுப்பிரமணியம் சமீதா,**
**ஊடக கற்கைகள் துறை,**
**யாழ். பல்கலைக்கழகம்.**


இலங்கையானது அரசியல், சமூக, பொருளாதார ரீதியாக பல்வேறு பட்ட நிலைகளில் வளர்ச்சியினை எட்ட இலங்கையின் சுற்றுலாத் துறையே அடித்தளமாக இன்றளவிலும் காணப்படுகின்றது.

அந்த வகையில் இயற்கை வளங்களினாலும் மனிதனால் செம்மைப்படுத்தப்பட்ட இயற்கை அரண்களாலுமே சுற்றுலாத் துறையின் வளர்ச்சி போக்கு தீர்மானிக்கப்படக் கூடியதாக உள்ளது.

அதன்படி, இலங்கையின் மலையகப் பகுதிகளில் ஏராளமான நீர்வீழ்ச்சிகளும் காடுகளும் நீர்த் தேக்கங்களும் நதிகளும் சூழவே இயற்கை ரசனைக்கு விருந்தாய் மலையகத்தின் அமைவிடம் காணப்படுகின்றது என்றே கூறலாம். மலையகப் பகுதியில் நுவரெலியா பிரதேசமே சுற்றுலாத் தளங்களில் மிகவும் சிறப்பு வாய்ந்த பகுதியாகக் கொள்ளப்படுகின்றது.

இங்கு இயற்கை வளம் மிக்க பூங்காக்கள், கண்களுக்கு விருந்தளிக்கும் உயரமான அழகிய நீர்வீழ்ச்சிகள் ,நதிகள் நீர்த்தேக்கங்கள் மற்றும் அதனோடு இணைந்த உயரமான மரங்களைக் கொண்ட காட்டுப் பகுதிகள் போன்ற இயற்கை வளங்களின் தொகுதியாகவே இப்பிரதேசத்தை நாம் அடையாளம் கண்டு கொள்ளலாம்.

அந்த வகையில் இன்றளவிலும் பலராலும் அறியப்படாத நுவரெலியா மாவட்டத்தின் மஸ்கெலியா பிரதேசத்தில் அமைந்துள்ள மஸ்கெலியா நீர்த்தேக்கம் (மவுஸ்ஸகெல்ல) சுற்றுலாப் பயணிகளை ஈர்த்த தளமாகவே இன்றளவில் வளர்ச்சி கண்டுள்ளது.

மஸ்கெலியா பிரதேசத்தைச் சூழவே சிவனொளிபாதமலை, ஏழு கன்னி மலைகள், 191 பயணிகள் மற்றும் பணியாளர்களைக் கொன்ற இலங்கையின் மிக மோசமான விமான பேரழிவு (1974) Martinair flight 138 விபத்து இடம் பெற்ற பிரதேசம், நீர்வீழ்ச்சிகள் என்பவற்றினை தன்னகத்தே மறைத்து வைத்திருக்கின்றது என்றே கூறலாம். இவற்றின் வரிசையிலே தான் மவுஸ்ஸகெல்ல நீர்த் தேக்கமும் உள்ளடங்கப்படுகிறது.

இந்தப் பிரதேசத்திற்கு நான் எனது நண்பர்களுடன் திட்டமிடப்படாத சமயத்தில் திடீரென சுற்றுலாவுக்காகச் சென்ற வேலையில், பல்வேறுபட்ட சுவாரசியமான தகவல்கள் என்னால் பெற்றுக்கொள்ளக் கூடியதாக இருந்தது.

சுற்றுலாப் பயணத்தின் போது இந்நீர்த் தேக்கம் தொடர்பான வரலாற்றுத் தகவல்கள் உள்ளூர் வாசிகளினால் வழங்கப்பட்டது.

இதன்படி, இந்நீர்த் தேக்கம் அமையப்பெற்ற பிரதேசமானது ஆதி காலத்தின் மஸ்கெலியாவின் ஒரு நகரம் நிர்மாணிக்கப்பட்ட பாரிய பிரதேசமாகவே காணப்பட்டது என்றும் 1964ஆம் ஆண்டு கடல் மட்டத்திலிருந்து சுமார் 2200 அடி உயரத்தில் மஸ்கெலியா ஓயாவை அணைக்கட்டி மவுஸ்கெல்ல நீர்த்தேக்கத்தை அமைக்க அரசாங்கம் திட்டமிட்டு இருந்ததென்றும் கூறப்பட்டது.

மஸ்கெலியாவின் மூழ்கிய நகரமான இந்த இடம் மத்திய மலைநாட்டில் நிலவும் வறட்சி காரணமாக மனிதனால் உருவாக்கப்பட்ட பிரதான நீர்த்தேக்கங்களின் நீர்மட்டம் குறைந்துள்ள நிலையில், அரசாங்க திட்டத்தின் அபிவிருத்திக்காகக் கிராம மக்கள் தமது பூர்வீக நிலங்களையும் சொத்துக்களையும் அரசாங்கத்திற்காகத் தியாகம் செய்த வரலாறு இதற்கு உண்டு என்றவாறாக கூறினர்.

இந்த நீர்த்தேக்கமானது, 1968இல் பழைய நகரமான மஸ்கெலியாவை மூழ்கடித்ததுடன், புதிய நகரம் மேல் நோக்கி மாற்றப்பட்டதாகவும் கூறப்படுகின்றது.

இப்பிரதேசத்தின் பழைய நகரத்தில் ஒன்றன்பின் ஒன்றாக அமைந்துள்ள போ மரக் கோயில், ஸ்ரீ கதிரேசன் இந்து கோவில், பள்ளிவாசல் ஆகியனவும் ஆலயத்தின் அமர்ந்துள்ள புத்தர் சிலை மற்றும் ஏனைய இடிபாடுகள் இன்றளவிலும் காலநிலை செல்வாக்கினால் நீர்மட்டம் குறையும் சந்தர்ப்பங்களில் முழுமையாக வெளித் தெரியக்கூடியதாகவும் காணப்படுகின்றது.

இந்நீர்த் தேக்கத்தின் நிர்மாணிப்பினை தொடர்ந்து மஸ்கெலியா நகரம் மற்றும் புறநகர் மக்கள் தமது அன்றாட வாழ்வில் பாரியளவிலான மாற்றங்களுக்கு முகம் கொடுக்க நேரிட்டதாகக் கூறப்படுகின்றது.

இதன் விளைவாக 155 மூதாதையரின் சொந்த நிலங்கள் வணிக சொத்துக்களுடன் இடம்பெயர்ந்ததாகவும் மஸ்கெலியாவின் பழைய நகரம் மற்றும் கங்கேவத்தை போன்ற பிரதேசங்கள் நீரில் மூழ்கியதாகவும் கூறப்படுகின்றது. பழைய நகரத்தில் உள்ள பள்ளிகள், காவல் நிலையங்கள், தபால் நிலையம், மூன்று தேயிலை தொழிற்சாலைகள் போன்ற பல கட்டிடங்கள் நீர்த் தேக்கத்திற்காக இடித்துத் தள்ளப்பட்ட போதிலும் வெள்ளத்தில் மூழ்கிய பழைய நகரத்தில் உள்ள மதக்கட்டிடங்களை அகற்ற யாரும் முன் வரவில்லை என்ற வரலாறும் கூறப்படுகின்றது.

இதன் விளைவாகவே 1968 மே மாத காலப்பகுதியில் நீர் நிரப்பும் விழா நடைபெறும்



வரை கிராம மக்கள் அவ்விடங்களை வணங்கியதாகவும் இவற்றில் பல கட்டமைப்புகள் தற்போது இல்லை என்றாலும் அவற்றில் சில முழுமையாக நீரில் மூழ்கிக் கிடப்பதாகவும் கூறப்படுகின்றது.

நாங்கள் சுற்றுலாவிற்காகச் சென்ற நேரத்தில், முற்று முழுதாக அந்த இப்பாடுகளுடன் கூடிய பிரதேசத்தை நேரடியாக அவதானிக்கக் கூடியதாகவும் இருந்தது. அதாவது, இந்த நீர்த்தேக்கத்தில் இன்றளவிலும் காணப்படும் பள்ளிவாசலிலும் கோவில்களிலும் இருந்த இடிபாடுகள், கற்களால் செதுக்கப்பட்ட சிலைகள், இடிந்த கோவிலின் தூண்களை அலங்கரிக்கும் மலர் உருவங்கள், புராண உருவங்களுடன் கூடிய கல் சிற்ப தூண்கள் என்பன 50 ஆண்டுகள் கடந்தும் தண்ணீருக்கு அடியிலிருந்தாலும் அதன் அமைப்பில் பெரிதளவிலான மாற்றம் ஏற்படவில்லை என்பது சிறப்புக்குரியதே.

மேலும் இங்குள்ள சிற்ப தூண்கள் கண்டியிலுள்ள கடலா தேனிய விகாரையில் உள்ள தூண்களை ஒத்திருப்பதும் குறிப்பிடத்தக்க விடயமாகும்.

நீர்த்தேக்கத்திற்கு அண்மையில் வசிக்கும் பிரதேசவாசிகளின் கருத்துக்களின் படி 1917இல் இந்தியச் சிற்பிகளின் வழிகாட்டுதலின் கீழ் உள்ள கோவில் கட்டப்பட்டுள்ளதாகவும் இது இந்தியாவிலுள்ள ஒரு இந்து பக்தருக்கு சொந்தமானது என்றதொரு செவிவழி கதை உள்ளதாகவும் கூறப்படுகின்றது.

அதுமட்டுமல்லாது, இந்து கோவிலை விட்டு வெளியே வரும் போது சில அடி தூரத்தில் ஒரு மசூதியின் இடிபாடுகளைக் கண்டுகொள்ளக் கூடியதாகவும் இருந்தது.

இங்கு இரண்டு பாழடைந்த தூண்கள் மட்டுமே எஞ்சியுள்ளதாகவும் ஏனையவை சேதமடைந்ததாகவும் காணப்படுகின்றன. இதனோடு சில இடிபாடுகளின் குவியல்களும் சிதைந்த அமர்ந்த புத்தர் சிலையும் கொண்ட புத்த ஆலயம் ஒன்று காணப்பட்டது.

மேலும், கோயில் இடிபாடுகளுக்கு முன்னால் ஒரு பூ மரத்தின் சிதைந்த கட்டை நின்று கொண்டு தான் இருக்கின்றது. இவற்றினையும் தாண்டி சிறிது தூரம் கடந்து ஒரு விநாயகர் கோவிலில் சிதறிக் கிடந்த கல் சிற்பங்களைக் கொண்ட மலர் பலகைகள் மற்றும் தூண்கள் தண்ணீரில் பாதி புதைந்ததாகவும் காணப்பட்டது.

இந்நீர்த் தேக்கத்தில் வருடத்திற்கு ஒருமுறை வறட்சியின் போது, இங்குள்ள கோயில்கள் அவற்றின் பாழடைந்த பெருமையுடன் வெளித் தெரியும். இதனால் இந்நீர்த் தேக்கம் ஒரு சுற்றுலா காந்தமாகவும் மாறியுள்ளது.

குறிப்பாக சிவனொளிப்பாத மலைக்குச் செல்லும் சில யாத்திரிகள் இந்நீர்த் தேக்கத்தில் மூழ்கி இருக்கும் மதச் சின்னங்களின் கண்கவர் இடிபாடுகளுக்கு அஞ்சலி செலுத்துவதையும் அதிகளவில் அவதானிக்கக் கூடியதாக இருந்தது.

மஸ்கெலியாவின் பழைய நகரத்தில் அமைந்துள்ள இந்நீர்த் தேக்கத்தின் அமைதியானதொரு மகத்துவம் மழை வேண்டிப் பிரார்த்திக்கும் மக்களின் கூட்டம் எவ்வளவு காலம் இங்கு இருக்கும் என்பது யாருக்கும் தெரியாது.

மேலும், இந்த இடிபாடுகள் இயற்கை சீற்றங்களினால் சில சந்தர்ப்பங்களில் அழிந்துவிடும் சாத்தியங்களும் காணப்படுகின்றது.

இருப்பினும், இடிபாடுகள் ஒரு அரிய காட்சியாகவே இங்குக் காணப்படுகின்றது. இவ்வாறான இடிபாடுகளைக் கொண்டும் சுற்றுலாத் தளங்கள் காணப்படும் என்பதற்குச் சிறந்த எடுத்துக்காட்டாக இந்த நீர்த்தேக்கம் காணப்படுகின்றது.

நான் சென்று ரசித்த பிரதேசங்களில் மிகவும் வித்தியாசமான ரசனை போக்குடன் என்னை ஆழமாகச் சிந்திக்க வைத்த ஒரு இடமாகவே இந்த நீர்த் தேக்கம் காணப்பட்டது. இப்பிரதேசத்தினை மையமாகக் கொண்டே பல்வேறு சுற்றுலாப் பயணிகளின் வருகையால் அவற்றைச் சூழ காணப்படும் பிரதேசவாசிகளின் பொருளாதார செயல்பாடுகள் சிலவும் இதனில் தங்கி இருக்கக்கூடியதாகவும் காணப்படுகின்றது. வருகின்ற காலங்களில் இயற்கையின் எதிர்ப்பு வினைகளால் சில சந்தர்ப்பங்களில் இந்த சுற்றுலா தளம் அழிவுடைய கூடியதற்கான வாய்ப்புகளும் காணப்படும். இருந்த போதிலும் இச்சுற்றுலா தளம் தொடர்பான ஆவணப்படுத்தல் என்பது மிக முக்கியமான பங்காக காணப்படுகின்றது.இவ்வாறாக வரலாற்றுத் தொன்மை பேசும் இந்த நீர்த் தேக்கத்தினை சென்று பார்ப்பது நமக்கு வரமாகக் கூட இருக்கலாம்.

# பங்களாதேஷை வெள்ளையடித்த இந்தியா




இருபதுக்கு-20 சர்வதேசப் போட்டித் தொடரில் பங்களாதேஷை இந்தியா வெள்ளையடித்தது.

மூன்று போட்டிகள் கொண்ட இத்தொடரின் முதலிரண்டு போட்டிகளிலும் ஏற்கெனவே வென்றிருந்த இந்தியா, ஹைதரபாத்தில் சனிக்கிழமை (12) நடைபெற்ற மூன்றாவது போட்டியிலும் வென்றமையைத் தொடர்ந்தே 3-0 என பங்களாதேஷை வெள்ளையடித்துள்ளது.

ஸ்கோர் விவரம்:

நாணயச் சுழற்சி: இந்தியா

இந்தியா: 297/6 (20 ஓவ. ) (துடுப்பாட்டம்: சஞ்சு சாம்சன் 111 (47), சூரியகுமார் யாதவ் 75 (35), ஹர்திக் பாண்டியா 47 (18), ரியான் பராக் 34 (13) ஓட்டங்கள்)

பங்களாதேஷ்: 164/7 (20 ஓவ.) (துடுப்பாட்டம்: தௌஹிட் ஹிரிடோய் ஆ.இ 63 (42), லிட்டன் தாஸ் 42 (25) ஓட்டங்கள். பந்துவீச்சு: ரவி பிஷ்னோய் 3/30 [4], மாயங்க் யாதவ் 2/32 [4], வொஷிங்டன் சுந்தர் [1], வருண் சக்கரவர்த்தி 0/23 [4], அபிஷேக் ஷர்மா 0/8 [1])

போட்டியின் நாயகன்: சஞ்சு சாம்சன்

தொடரின் நாயகன்: ஹர்திக் பாண்டியா

### இங்கிலாந்துக்கெதிரான இரண்டாவது டெஸ்டிலிருந்து

## நீக்கப்படப் போகும் பாபர் அஸாம்



இங்கிலாந்துக்கெதிரான இரண்டாவது டெஸ்டுக்கான பாகிஸ்தான் அணியிலிருந்து பாபர் அஸாமை நீக்குமாறு புதிதாக அமைக்கப்பட்ட அலீம் தார், ஆகிப் ஜாவிட், அஸார் அலி உள்ளடங்கிய அசாட் ஷஃபிக், ஹஸன் சீமா, அணித்தலைவர் ஷண் மசூட், பயிற்சியாளர் ஜேஸன் கிலெஸ்பி ஆகியோருள்ள தேர்வுக் குழு பரிந்துரைத்தாகக் கூறப்பட்டது.

முதலாவது டெஸ்டுக்கு பின்னர் பாபருக்கு மசூட் ஆதரவளித்ததுடன், அதற்கு கிலெஸ்பியும் ஆதரவளித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

கடந்த 2022ஆம் ஆண்டு டிசெம்பர் மாதத்துக்குப் பின்னர் டெஸ்ட் அரைச்சதமொன்றை பாபர் பெறவில்லையென்பது குறிப்பிடத்தக்கது.

### தேசங்களுக்கான லீக்:

## போலந்தை வீழ்த்திய போர்த்துக்கல்

### டென்மார்க்கை வென்ற ஸ்பெய்ன்



ஐரோப்பிய கால்பந்தாட்டச் சங்கங்களின் ஒன்றியத்தின் தேசங்களுக்கான லீக் தொடரில் போலந்தில் ஞாயிற்றுக்கிழமை (13) நடைபெற்ற அவ்வணியுடனான குழு ஏ போட்டியில் 3-1 என்ற கோல் கணக்கில் போர்த்துக்கல் வென்றது.

போர்த்துக்கல் சார்பாக பெர்ணார்டோ சில்வா, கிறிஸ்டியானோ றொனால்டோ ஆகியோர் தலா ஒவ்வொரு கோலைப் பெற்றதோடு, மற்றைய கோல் ஓவ்ண் கோல் முறையில் பெறப்பட்டிருந்தது. போலந்து சார்பாகப் பெறப்பட்ட கோலை பியோத்தர் ஸிலென்ஸ்கி பெற்றிருந்தார்.

இதேவேளை, தம்நாட்டில் நடைபெற்ற டென்மார்க்குடனான குழு டி போட்டியில் 1-0 என்ற கோல் கணக்கில் ஸ்பெய்ன் வென்றது. ஸ்பெய்ன் சார்பாகப் பெறப்பட்ட கோலை மார்டின் ஸுபிமென்டி பெற்றிருந்தார்.

இந்நிலையில், தம்நாட்டில் நடைபெற்ற சுவிற்ஸர்லாந்துடனான குழு டி போட்டியில் 2-0 என்ற கோல் கணக்கில் சேர்பியா வென்றது. சேர்பியா சார்பாக அலெக்ஸான்டர் மிற்றோவிச் ஒரு கோலைப் பெற்றதோடு மற்றைய கோல் ஓவ்ண் கோல் முறையில் பெறப்பட்டது.

### கால் காயத்தால்

## இங்கிலாந்துக் குழாமிலிருந்து வெளியேறிய ஸாகா




கால் காயமொன்று தொடர்பான மேலதிக மதிப்பீடொன்றுக்காக அவரது இங்கிலாந்து பிறீமியர் லீக் கால்பந்தாட்டக் கழகமான ஆர்சனலுக்கு இங்கிலாந்தின் முன்களவீரரான புகாயோ ஸாகா திரும்பியுள்ளதாக இங்கிலாந்து அணி சனிக்கிழமை (12) தெரிவித்துள்ளது.

கடந்த வெள்ளிக்கிழமை (11) நடைபெற்ற கிரேகத்ததுக்குகெதிரான போட்டியில் 51ஆவது நிமிடத்தில் களத்துக்கு வெளியே 23 வயதான புகாயோ ஸாகா செல்ல வேண்டியிருந்தது.

## ஓய்வு பெற்ற ஜோயல் மட்டிப்

இங்கிலாந்து பிறீமியர் லீக் கால்பந்தாட்டக் கழகமான லிவர்பூலின் முன்னாள் பின்களவீரரான ஜோயல் மட்டிப், தனது 33ஆவது வயதில் ஓய்வு பெற்றுள்ளதாக அறிக்கையொன்றின் மூலம் லிவர்பூல் சனிக்கிழமை (12) உறுதிப்படுத்தியுள்ளது.

கடந்த 2016ஆம் ஆண்டு லிவர்பூலில் இணைந்த மட்டிப், 2019ஆம் ஆண்டு ஐரோப்பிய கால்பந்தாட்டக் கழகங்களின் ஒன்றியத்தின் சம்பியன்ஸ் லீக்கையும், பிறீமியர் லீக்கையும் வென்றிருந்தார்.




அமெரிக்கா

### ஹாரிஸின் மருத்துவ அறிக்கையால்

## ட்ரம்புக்கு நெருக்கடி



அமெரிக்க ஜனாதிபதித் தேர்தல் எதிர்வரும் நவம்பர் மாதம் நடைபெறவுள்ள நிலையில், தேர்தலில் போட்டியிடவுள்ள கமலா ஹாரிஸ் தனது உடல்நிலை தொடர்பான மருத்துவ அறிக்கையை வெளியிட்டுள்ளார்.

மற்றுமொரு ஜனாதிபதி வேட்பாளரான ட்ரம்ப், தனது உடல்நிலை குறித்த விரிவான தகவல்களை வெளியிட மறுத்து வரும் நிலையில், கமலா ஹாரிஸ் தனது மருத்துவ அறிக்கையை வெளியிட்டுள்ளார்.

இந்த அறிக்கையை கமலா ஹாரிசின் டாக்டர் ஜோசுவா சிம்மன்ஸ் அளித்துள்ளார்.

அதில், “கமலா ஹாரிஸ் சிறந்த ஆரோக்கியத்துடன் இருக்கிறார். அவர் ஆரோக்கியமான வாழ்க்கை முறையை கடைபிடிக்கிறார். கடுமையான வேலைப்பளுவுக்கு மத்தியிலும் ஆரோக்கியமான உணவு முறையை பின்பற்றுகிறார். அவர் நல்ல உடல் நலத்துடன் இருப்பதுடன், உயர்ந்த பதவியை வகிக்க தேவையான மன நிலையுடன் உள்ளார்.

அவர் புகையிலை மற்றும் ஆல்கஹாலை பயன்படுத்துவதில்லை. அவருக்கு ஒவ்வாமை பாதிப்பு உள்ளது. மூன்று ஆண்டுகளாக ஒவ்வாமை நோய் எதிர்ப்பு சிகிச்சையில் இருக்கிறார்.

ஹாரிஸ் லேசான கிட்டப்பார்வை கொண்டவர். இதற்காக அவர் காண்டாக்ட் லென்ஸ்கள் அணிந்து உள்ளார். அவருக்கு 3 வயதாக இருந்தபோது, வயிற்று அறுவை சிகிச்சை செய்யப்பட்டது. அவருக்கு சர்க்கரை நோய், உயர் இரத்த அழுத்தம், அதிக கொழுப்பு, இதய நோய், நுரையீரல் நோய், நரம்பியல் கோளாறுகள், புற்றுநோய் அல்லது ஆஸ்டியோபோரோசிஸ் போன்ற பாதிப்புகள் இல்லை” என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

கமலா ஹாரிசுக்கு முன்பு தற்போதைய ஜனாதிபதி ஜோ பைடன் வேட்பாளராக அறிவிக்கப்பட்டு இருந்தார். ஆனால், அவருக்கு வயது ஆகிவிட்டதாக ட்ரம்ப் விமர்சனம் செய்திருந்தார். இதற்கிடையே, கமலா ஹாரிஸ் தனது மருத்துவ அறிக்கையை வெளியிட்டுள்ளதால், தற்போது ட்ரம்புக்கு நெருக்கடி ஏற்பட்டுள்ளது.

போலந்து

### போலந்தில் தஞ்சம் கோரும் உரிமை

## தற்காலிகமாக இரத்து



பெலாரஸுடன் அதிகரித்து வரும் யுத்த பதற்றங்களால் ஏற்படுத்தப்படும், ஒழுங்கற்ற இடம்பெயர்வைக் குறைப்பதை நோக்கமாகக் கொண்டு, போலந்து அரசாங்கம் அந்நாட்டுக்குத் தஞ்சம் கோரும் உரிமையைத் தற்காலிகமாக நிறுத்தி வைக்கவுள்ளது.

பெலாரஸ் மக்கள், அவர்களது எல்லை வழியாக போலந்து நாட்டுக்குள் நகர்வை எளிதாக்குகிறது என்று, போலந்து அரசாங்கம் குற்றம் சாட்டியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

லெபனான்

### லெபனான் மீதான தாக்குதலில்

## 2,255 பேர் பலி

செப்டெம்பரில், லெபனான் மீதான தாக்குதல்களை இஸ்ரேல் தீவிரப்படுத்தியதில் இருந்து குறைந்தது 1,645 பேர் கொல்லப்பட்டதாக லெபனானின் சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

ஹிஸ்புல்லாவுக்கும் இஸ்ரேலியப் படைகளுக்கும் இடையே ஒரு வருட சண்டைக்குப் பிறகு மொத்தம் 2,255 பேர் வரை இறந்துள்ளனர் எனவும் தெரிவிக்கப்படுள்ளது.

அத்துடன், வடக்கு காசாவின் இராணுவ முற்றுகையின் போது குறைந்தது 200 பேர் இஸ்ரேலியப் படைகளால் கொல்லப்பட்டுள்ளதாக, வெளிநாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.



மகாராஷ்டிரா

### மகாராஷ்டிரா, ஜார்க்கண்ட்டுக்கான

## தேர்தல் திகதி அடுத்த வாரம் அறிவிப்பு

மகாராஷ்டிரா, ஜார்க்கண்ட் ஆகிய பகுதிகளில் தேர்தலை நடத்துவதற்கான திகதி அடுத்த வாரம் அறிவிக்கப்படவுள்ளது.

288 தொகுதிகளை கொண்ட மகாராஷ்டிரா சட்டசபை பதவிக்காலம் நவம்பர் மாதம் 26ஆம் திகதியும் 81 இடங்களை கொண்ட ஜார்க்கண்ட் சட்டசபையின் பதவிகாலம் ஜனவரி 5ஆம் திகதியும் முடிவடையவள்ளது.

இதனால் இந்த இரு மாநிலங்களிலும் சட்டசபை தேர்தலை நவம்பர் அல்லது டிசம்பர் மாதங்களில் நடத்துவதற்கு, தலைமை தேர்தல் ஆணையம் திட்டமிட்டுள்ளது.

இந்த நிலையில், மகாராஷ்டிரா, ஜார்க்கண்ட், மாநிலங்களுக்கான சட்டசபை தேர்தல் திகதியை தேர்தல் கமிஷன் அடுத்த வாரம் அறிவிக்கும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

தீபாவளி உள்ளிட்ட பண்டிகை கொண்டாட்டத்துக்கு பிறகு தேர்தல் நடத்தப்படலாம். நவம்பர் 2ஆவது அல்லது 3ஆவது வாரத்தில்



வாக்குப்பதிவு நடைபெறலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

### அதிக சொத்து சேர்த்தவர்களில்

## அதானிக்கு முதலிடம்



இந்தியாவின் செல்வந்தர்கள் பட்டியலை அமெரிக்காவின் பிரபல ஃபோர்ப்ஸ் [Forbes] இதழ் வெளியிட்டுள்ளது.

ஒக்டோபர் 9ஆம் திகதி வெளியான அந்த பட்டியலின்படி, 2024ஆம் ஆண்டில் 100 இந்தியப் செல்வந்தர்கள் தொழிலதிபர் முகேஷ் அம்பானி முதலிடத்தை பிடித்துள்ளார்.

ரிலையன்ஸ் இண்டஸ்ட்ரீஸ் உள்ளிட்டவற்றின் சொந்தக்காரரான அம்பானி, நடப்பு ஆண்டில் 27.5 பில்லியன் டொலர்கள் வரை கூடுதலாக சொத்து சேர்த்துள்ளார். அவரின் சொத்துமதிப்பு தற்போது 119.5 பில்லியன் டொலர்களாக அதிகரித்துள்ளது.

எனவே, உலகப் செல்வந்தர்கள் பட்டியலில் அம்பானிக்கு 13ஆவது இடம். அதற்கு அடுத்தபடியாக 116 பில்லியன் அமெரிக்க டொலர்கள் சொத்துமதிப்புடன் அதானி குழும நிறுவனர் கௌதம் அதானி இரண்டாவது இடத்தில் உள்ளார்.

மொத்த மதிப்பில் அம்பானிக்கு அடுத்தபடியாக இருந்தாலும், கடந்த ஒரே ஆண்டில் அதிக சொத்து சேர்த்ததில் அம்பானியை அதானி பின்னுக்குத்தள்ளியுள்ளார்.

மும்பை

## பாபா சித்திக் சுட்டுக் கொலை

அஜித் பவார் தலைமையிலான தேசியவாத காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த தலைவரும் முன்னாள் அமைச்சருமான பாபா சித்திக், சனிக்கிழமை(12) இரவு சுட்டுக் கொல்லப்பட்டார்.



மும்பையின் பந்த்ரா கிழக்கு பகுதியில், சனிக்கிழமை (12) இரவு நடத்தப்பட்ட துப்பாக்கிச்சூட்டு சம்பவத்திலேயே, இவர் உயிரிழந்துள்ளார். இந்தச் சம்பவத்துகுப் பிறகு மகாராஷ்டிரா முதல்வர் ஏக்நாத் ஷிண்டே, பாபா சித்திக் இறந்ததை உறுதி செய்தார். இந்த சம்பவம் தொடர்பில் 2 பேர் கைது செய்யப்பட்டுள்ளதாகவும், ஒருவர் தலைமறைவாகியுள்ளதாகவும் முதல்வர் ஏக்நாத் ஷிண்டே தெரிவித்தார். கைது செய்யப்பட்டவர்களில் ஒருவர் ஹரியாணா,உத்தர பிரதேசத்தைச் சேர்ந்தவர்கள் என, பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டினால் திங்கட்கிழமை, 14 ஒக்டோபர் 2024, இல. 08, ஹுனுபிட்டிய குறுக்கு வீதி, கொழும்பு - 02இல் வடிவமைக்கப்பட்டு, இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.